Registered as aNewspaper

பக்கங்கள் 8

விலை ரூபா 6·00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 04 | 21-10-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 245

## பொதுசன பிரதிநிதித்துவமுடைய அமைப்புக்களை பதிவுசெய்தல்

பொதுசன பிரதிநிதித்துவமுடைய அமைப்புகளை பதிவு செய்தல் தொடர்பாக தமிழீழ நிர்வாக சேவையினால் ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்த தகவல்களின் பிரகாரம் விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி ஒப்படைத்த அமைப்புக்களை சமூகமட்டத்தில் தொடர்ந்து இயங்க அனுமதிக்கும் சான்றிதழ்களை வழங்கும் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 13-10-94 முதல் தமிழீழ நிர்வாக சேவை விண்ணப்பப் படிவங்களைவழங்கும் [8ஆம பக்கம் பார்க்க]

## பூநகரிப் பாதையை இராணுவம் கண்காணிக்க வேண்டுமாம்

சேரதீவு சங்குப்பிட்டி பாதை திறக்கப்படுமிடத்து, பூநகரியில் பயணிகளை சோதனையிடுவதற்கான காவல் நிலையத்தை அமைக்காவிட்டாலும் முகாமில் இருந்து நடமாட்டங்களை அவதானிக்க வேண்டியதேவை இருப்பதக இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பூநகரியில் உள்ள இராணுவ முகாமை அகற்றி சேரதீவு-சங்குப்பிட்டியூடாக யாழ்ப்பாணத்துக்கு தரைவழிப் பாதை ஒன்று திறந்து பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்துமாறு விடுதலைப் புலிகள் அரசிடம் கோரிக்கை விடுத்திருப்பது தெரிந்ததே.

## யுத்த நிறுத்தத்திற்கான சாத்தியம் உடனில்லை

(மணிலா)

புலிகளுக்கும் அரசுக்கும் இடையே போர்நிறுத்தம் பற்றிய உடனடியாக தீர்மானம் எதுவும் எடுக்கப்படும் சாத்தியம் இல்லையென அரசின் அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்துள்ளது.

மேலும், இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் போர் நிறுத்தம் பற்றிய பரிந்துரையை புலிகளிடமிருந்து அரசு எதிர்பார்க்கும் எனவும் யாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியும் ஆராயப்படும் எனவும் அரச உயரதிகாரிகளை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## அமைச்சரவை தீர்மானங்களுடன் அரச பிரதிநிதிகள் குழு யாழ்.செல்லும்

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவிருக்கும் அரசாங்க தரப்பு தூதுக்குழு, அண்மையில் முதலாம் கட்டப் பேச்சுக்களின் பின் அமைச்சரவை எடுத்த தீர்மானங்களை புலிகளிடம் சமர்ப்பிக்க கொண்டு செல்லும் என தகவல்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், முதலாம் கட்ட பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் இம்முறை விரிவாக ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஒருநாள் மட்டுமே நடைபெறும்

# முப்படை அதிகாரிகள் பிரதமர் விரைவில் சந்திப்பு

## போர் நிறுத்தம்;பூநகரிப் பாதை திறப்பு அரசின் நிலைப்பாடு அறிவிக்கப்படும்

(கொழும்பு)

முப்படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுடன் பிரதமர் சந்திரிகா விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இப்பேச்சுக்களின் போது இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பது குறித்த படை அதிகாரிகளின் கருத்துக்களைக் கேட்டறிவதுடன் போர் நிறுத்தம், பூநகரி சங்குப்பிட்டிப்பாதை திறப்பது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும தெரிவிப்பார் என அறிய வருகின்றது.

இச்சந்திப்பு விரைவில் நடைபெறும் என தெரிவிக்கப்படும் அதேவேளை இச்சந்திப்பு எப்போது நடைபெறும் என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என தெரிய வருகிறது.

இச் சந்திப்பின் போது முப்படையைச் சேர்ந்த அதிகாரிகளுடன் பிரதமர் சந்திரிகா யுத்த நிறுத்தம், பூநகரி - சங்குப்பிட்டி பாதை திறப்பது தொடர்பாக தனது முடிவை

கருத்துகளும் இச்சந்திப்பின் போது அறியப்படும்.

யுத்த நிறுத்தம் தொடர்பான அரசாங்கத்தின் முடிவை விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னர் முப்படை அதிகாரிகளுடனான சந்திப்பு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### வீரச்சாவு



லெப், மதன்

மட்டக்களப்பு மாவட்டம் காஞ்சிரம் குடா என்னும் இடத்தில் கடந்த 17 ஆம் திகதி மதியம் 12, 00 மணியளவில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் சுற்றி வளைத்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் மதன்

### முதற்கட்டப் பேச்சுவார்த்தை

## கொழும்பில் கூட்டறிக்கை நேற்று வெளியாகியது

(கொழும்பு)

...ம்பில் அரசாங்கத்தினால்

## அரச பிரதிநிதிகள் குழு யாழ். செல்லும்

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவிருக்கும் அரசாங்க தரப்பு தூதுக்குழு, அண்மையில் முதலாம் கட்டப் பேச்சுக்களின் பின் அமைச்சரவை எடுத்த தீர்மானங்களை புலிகளிடம் சமர்ப்பிக்க கொண்டு செல்லும் என தகவல்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், முதலாம் கட்ட பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் இம்முறை விரிவாக ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் ஒருநாள் மட்டுமே நடைபெறும்

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை, ஒரு நாள் மட்டும் நீடிக்கும் என பி பி ஸியின் கொழும்பு முகவர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸியின் சிங்கள சேவையான சந்தேசியாவுக்கு அவர் அளித்துள்ள செய்தியில் மேலும் குறிப்பிடுகையில், போர் நிறுத்தம் மற்றும் மின்சக்தி தொலைத்தொடர்பு மீண்டும் ஏற்படுத்தப்படுவது, இதற்காக பொறியியலாளர்களை வடக்கிற்கு அனுப்புவதுபோன்றவிடயங்கள் ஆராயப்படும் என நம்பப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## காணாமற்போன படையினர் குறித்து புலிகளுடன் பேச்சு நடத்துக

### அரச தரப்பு குழுவிடம் ராணுவம் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த வருடம் பூநகரி இராணுவ தளத்தின் மீதான புலிகளின் தாக்குதலில் காணாமற் போனதாக கருதப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவ சிப்பாய்களின் நிலை பற்றி 2ஆம் கட்டப் பேச்சுக்களில் புலிகளிடம் கேட்டறியுமாறு, அரச தூதுக்குழு உறுப்பினரிடம் இராணுவம் வேண்டுகோள் விடுக்க விருப்பதாக கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

மேற்படி காணாமல் போன சிப்பாய்கள் கொல்லப்பட்டு விட்டனரா அல்லது உயிருடன் இருக்கிறார்களா என்பதை அறிவதில், குறிப்பிட்ட சிப்பாய்களின் உறவினர்கள் பெரிதும் ஆவலாயிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பதாக அத் தினசரி மேலும் குறிப்பிட்டுள்ளது.

## 3500 கோடி ஆயுத பேரத்தில் 500 கோடி ரூபா லஞ்சம்

(கொழும்பு)

சென்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசு மேற்கொண்ட 3500 கோடி ரூபா ஆயுத பேரத்தை தொடர்ந்தும் செயற்படுத்தினால் 500 கோடி ரூபா இலஞ்சமாக தரப்படும் என சம்பந்தப்பட்டோர் தன்னிடம் தெரிவித்ததாக பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

தென்பகுதியில் நடந்த பிரசாரக் கூட்டமொன்றில் அவர் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் கூறுகையில், மேற்படி ஆயுத பேரத்தில இதுவரை 17 கோடி ரூபா இலஞ்சமாக வழங்கப்பட்டிருப்பதும் இப்போது தெரியவந்திருப்பதாகவும், இவை பற்றிய விசாரணைகளின் முடிவில் பல அதிர்ச்சியான தகவல்களும் வெளியாகலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு கிராமங்கள் படையினரால் சுற்றிவளைப்பு

### பொதுமக்கள் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மாவடி முன்மாரிப் பிரதேசத்தில் உள்ள 19ஆம் கட்டை இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் நடத்திய சுற்றிவளைப்பின் போது பொதுமக்கள் பலர் கைது செய்யப்பட்டுதுன்புறுத்தப்பட்டனர்

கடந்த 17ஆம் திகதிகாலை 6 30 மணியளவில் தாந்தாமலை, பன்சேனை, இரும்பன்

(8ஆம் பக்கம் பார்க்க)



லெப். மதன்

மட்டக்களப்பு மாவட்டம் காஞ்சிரம் குடா என்னும் இடத்தில் கடந்த 17 ஆம் திகதி மதியம் 12.00 மணியளவில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் சுற்றி வளைத்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் மதன் (கதிர்காமர் பரமானந்தம், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

குறித்த படை அதிகாரிகளின் கருத்துக்களைக் கேட்டறிவதுடன் போர் நிறுத்தம், பூநகரி சங்குப்பிட்டிப்பாதை திறப்பது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும தெரிவிப்பார் என அறிய வருகின்றது.

இச்சந்திப்பு விரைவில் நடைபெறும் என தெரிவிக்கப்படும் அதேவேளை இச் சந்திப்பு எப்போது நடைபெறும் என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என தெரிய வருகிறது.

இச் சந்திப்பின் போது முப்படையைச் சேர்ந்த அதிகாரிகளுடன் பிரதமர் சந்திரிகா யுத்த நிறுத்தம், பூநகரி - சங்குப்பிட்டி பாதை திறப்பது தொடர்பாக தனது முடிவை தெளிவாக தெரிவிப்பார் என கூறப்படுகிறது.

யுத்த நிறுத்தம் குறித்தும், பாதை திறப்பு குறித்தும் முப்படை அதிகாரிகளினதும் கருத்துகளும் இச்சந்திப்பின் போது அறியப்படும்.

யுத்த நிறுத்தம் தொடர்பான அரசாங்கத்தின் முடிவை விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னர் முப்படை அதிகாரிகளுடனான சந்திப்பு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## காங்கேசன் சீமெந்து ஆலை புனரமைக்ககுழு புறப்பட்டது

(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்து ஆலையை மீள கட்டியெழுப்பி அதன் உற்பத்தியை ஆரம்பிக்கும் நோக்குடன் விசேட தொழில்நுட்பவியலாளர் மற்றும் அதிகாரிகளைக்கொண்ட ஓர் குழு காங்கேசன்துறை நோக்கி புறப்பட்டுள்ளது.

பதினெட்டுப் பேர் அடங்கிய இக்குழு தொழிற்சாலையைப் பார்வையிட்டு இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட சேதங்களைக்கணக்கெடுக்க இருப்பதாகவும் உடனடியாக திருத்த வேலைகள் மேற்கொள்ளுமாறு இக்குழுவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிய வருகிறது.

பருத்தித்துறை வைத்தியசாலையில்

## இரு வைத்தியநிபுணர்களை ஓய்வு பெறப் பணிப்பு

[வடமராட்சி]

பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் பணிபுரிந்த இரண்டு வைத்திய அதிகாரிகளை நவம்பர் மாதம் 15 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுமாறு யாழ்சுகாதார சேவைப் பணிப்பாளரினால்கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது

அறுபது வயதுக்கு மேல் பணிபுரிபவர்கள் எனக் கருதப்பட்டு மாவட்ட வைத்திய அதிகாரி திரு எஸ் கதிரவேற்பிள்ளை, குழந்தைகள் வைத்திய நிபுணர் டாக்டர் கே இராசலிங்கம் என்போரை ஓய்வு பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

இவ் அறிவிப்பையடுத்து மேற்படி வைத்தியசாலையில் டாக்டர்களின் பற்றாக்குறை மேலும் தலைதூக்கி நிற்கிறது

யாழ். மாவட்ட தேர்தல்

## ஆட்சேபனை மனுக்கள் நவம்பரில் விசாரணை

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவான பத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் தெரிவுக்கெதிரான மூன்று தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன,

இவ்விசாரணைகள் நவம்பரிலும் டிசம்பரிலும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று ஆட்சேபனை மனுக்களும், யாழ் மாவட்ட சுயேட்சைக்குழு ஒன்று, ஈ பி ஆர். எல். எவ் முஸ்லிம் காங்கிரஸ் என்பவற்றால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டப் பேச்சுவார்த்தை

## கொழும்பில் கூட்டறிக்கை நேற்று வெளியாகியது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளும் அரசாங்க தரப்பு பிரதிநிதிகளும் யாழ்ப்பாணத்தில் நடத்திய முதற் கட்டப் பேச்சுக்களின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை நேற்று கொழும்பில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டது

இக் கூட்டறிக்கை யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிடப்பட்டமை தெரிந்ததே.

## அரசதரப்பு பிரதிநிதிகள் 24 ம்திகதிகாலைபுறப்படுவர்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெறவுள்ள இரண்டாம்கட்ட பேச்சுவார்த்தையில்கலந்துகொள்ளவுள்ள அரச பிரதிநிதிகள் வரும் 24ஆம் திகதி காலை கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வரவுள்ளனர்

இவர்கள் முதலாம் கட்ட பேச்சுவார்த்தையில் இடம்பெற்றவற்றிற்கான தீர்வுகளையும், அரசாங்கத்தின் கருத்துக்களையும் எடுத்துவர இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சந்திரிகா பிரசார நிகழ்வில் தமிழ் இளைஞன் கைது

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவின் தேர்தல் பிரசாரமொன்றை பார்வையிட வந்த தமிழ் இளைஞன் ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று மதிதுகமவில் இடம் பெற்றுள்ளது.

கைதாகிய இளைஞருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகள் ஏதுமுண்டா என விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிசார் தெரிவித்துளளனர்.

## யாழ்.இல்கூட்டுறவு மொத்த விற்பனை தாபன கிளை

### அமைச்சர் திறந்து வைப்பாராம்

யாழ்ப்பாணத்தில் வெகு விரைவில் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின்கிளையொன்று திறந்து வைக்கப் படவுள்ளதாக, வர்த்தக வாணிப உணவுத்துறை அமைச்சர் அறிவித்துளளார்.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவின் பணிப்பின்பேரில் வர்த்தக வாணிப உணவுத்துறை அமைச்சின் அதிகாரிகளுடனும், கூட்டுறவுமொத்த விற்பனை நிலையத்தின் அதிகாரிகளுடனும், அமைச்சர் கலந்துரையாடல் நடத்தியுள்ளதாகவும் இம்மாத இறுதிக்குள் கிளையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளையை நிறுவ பொருத்தமான கட்டடம், யாழ் அரச அதிபரின் ஆலோசனையுடன் பெற்றுக்கொள்ள உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்கு முன்னர் இடம்பெறவுள்ள திறப்பு விழாவில் கலந்துகொள்ள அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ண உயரதிகாரிகளுடன், யாழ்ப்பாணத்துக்கு செல்லுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### வித்துக்கள்

வீட்டுத்தோட்டச் செய்கை யாளருக்கென சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய விவசாயக் கழகம் உவந்தளித்த புளியவரை வித்துக்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்- மில்க்வைற்

(சி 10549)

### புலமைப்பரிசிற் பயிற்சி

ஆண்டு3 4,5 மாணவர்களுக்கு ஏற்ற ''புலமைப் பரிசில் பயிற்சி'' விடைகள்,கட்டுரைகள் 15 தமிழ், கணித, ஆங்கில பயிற்சிகளுடன் 14-10-94 விஜயதசமியன்று வெளியாகியுள்ளது! பிரபல பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கும் ஏற்றது,சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்; புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்:

(9745)

### ஆண்டு3,4,5

ஆண்டு 3 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் (1996) மாதிரி வினாத்தாள் 23.10.94ஞாயிறு வெளியிடப்படும் ஆண்டு [4, ஆண்டு 5 மாணவர்களுக்கு16-10-94 ல் வெளியிட்ட வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம் மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி யாழ்ப்பாணம்- (9744)


### யாழ்ப்பாணத்தில்

(Salmonellatyphi)என்ற நெருப்புக்காய்ச்சல் காரணிகளாகும்.இவற்றை அழிக்கும்நுண் உயிர்க்கொல்லிகள்சாதாரணமாகப் பாவனையாகும் குளோறம்பினிக்கோல (Chloramphenicol) அம்பிசிலின் (ampicillin ஆக அமைபாது நோர்புளொக்சசின்(Norflox cin) சிப்புறோபுளொக்சசின் (Ciprofloxacin) என்பவையாக ஆய்வுகள் தெரியத்தந்தன. இதன் காரணம் முறையற்ற பாவனையும் பாவிக்கவேண்டிய அளவிற்குக் குறைவாகவும், (Indiscriminate and inadequate dose Ampicillin, Chloramphenicol ஆகிய நுண் உயிர்க்கொல்லிகள், சமூக வைத்தியரால் பெரும்பாலும் பாவிக்கப்படுவதாகும். இத்தகைய பாவனையால் கிருமிகள் இம் மருந்துவகை தம்மைத் தாக்காதிருக்கும் சக்தியை தாமாகவே வளர்க்கின்றன. இதற்கு இன்னோர் காரணம், மலேரியாத் தாக்கம் பெற்ற நோயாளி ஒருவரின் கலனூடாகப் பாதிப்பின்மை Cell mediatedimmunity வீழ்ச்சியடைவது ஆகும் நெருப்புக்காய்ச்சல் உடலினுள் குணம்பெற கலனுடாகப் பாதிப்பின்மையே முக்கிய காரணமாகும். கலனூடக பாதிப்பின்மை வீழ்ச்சியால் நெருப்புக்காய்ச்சல் நோய் குறுகிய காலத்தில் மாறாது பல நாட்கள் நீடித்துக் காணப்படும். இப்போதுபலநாட்கள்நோயாளிக்குக்குளோறம்பினிக்கோல் கொடுக்க வேண்டிய நிலை உண்டாகிறது. இதனால் அக்கிருமி தாக்கம் பழக்கப்பட்டுகுளோறம்பினிக்கோலை எதிர்க்கும் சக்தி பெறுகின்றது இதனாற் குளோறம் பினிக்கோல் பயனற்றதாகின்றது. எனவே இந்நோயைக் குணப்படுத்த, முற்கூறிய நோர்புளொக்சசின் சிப்புறோபுளொக்சசினி ஆகிய மருந்துகளே பாவிக்கப்படல் வேண்டும். இம் முறையால் மரணவீதம் தவிர்க்கப்படலாம். குளோறம் பினிக்கோல் பாவனை நோய் பரவி வரும் சமூகத்தில் முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டால், சில காலத்தின் பின் குளோறம் பினிக்கோல் சல்மனெல்லா டைபியை அழிக்கும் தன்மையை மீளப்பெறும். இவ்வகை கையாளப் பெறாதுவிடின், நோயாளியின் பராமரிப்புச்செலவு கூடுதலாக அமையும் சிப்புறோ புளொக்சசின் சிறாருக்குச் சில தீப அசௌகரியங்களை விளைவிப்பதால் சிறாருக்கு நோர்புளொக்சசினை மட்டுமே உபயோகித்தல் சிறந்தது. ஏனையோருக்கு கூறப்பட்ட இரு மருந்துகளையும் பாவிக்கலாம்.

நோய் தடைக்கு குடிநீர்ச் சுத்தம்,தனிமனிதசுகாதாரம் மலசல கூடப் பாவனைகளும் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் இத்துடன் மலேரியா நோய் மலதியன் (Malathian) பாவனையால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படவேண்டும்.

இவ்வாய்விற்கு சகல வசதிகளையும் வழங்கிய யாழ் மருத்துவ பீடாதிபதிக்கு நன்றி ஒத்தாசை வழங்கிய வைத்தியர்களுக்கு ஆய்வில் உதவிய மருத்துவ ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்களுக்கும் நன்றி.


## தமிழ்த் தட்டெழுத்தாளர்கள் தேவை

அனுபவச் சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு 25-10-94 க்கு முன் விண்ணப்பக்கவும்.

''சாளரம்''

வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

(9742)



## இதோ! மகிழ்ச்சிகரமான செய்தி......

இன்றைய நவநாகரிகத்திற்கு ஏற்ப,
உங்கள் எண்ணம் போல்,
எந்த விலையிலும் தெரிவு செய்ய,

நங்கையர்களுக்கும்
ஆடவர்களுக்கும்
சிறுவர் சிறுமியர்களுக்கும்

ஏற்ப. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
''ரெடிமெட் அயிட்டம்''
''சேட்டிங் சூட்டிங்''
சாறி வகைகள்''
''பட்டு வகைகள்''

மற்றும் அனைத்துப் புடவைத் தினிசுகளும் மொத்தமாகவும், சில்லறைபாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

## சிவராதா புடவை அகம்

16 B, மேஜர் சோதியா தெரு,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-10551)



வரதர் எழுதிய

## பாரதக் கதை

வெளியீட்டு விழா

23-10-1994 ஞாயிறு காலை 9 மணிக்கு
நாவலர் கலாசார மண்டபத்தில்
வருகை தந்து சிறப்பியுங்கள் (9741)


## விண்சென்ற ஓர் திங்கள் நினைவஞ்சலி

மண்ணிற்கு
1941.05.27



விண்ணிற்கு
21-09-1994

### அமரர் யோசவ் பெர்னாண்டோ

மட்டிலாக் கோமான் யோசவ் பெர்னாண்டோ விட்டுநத மாநிலத்தை விண்சென்று ஓர்திங்கள்

## நினைவு கூருகின்றோம்...

### 21. 10. 1994

1985ம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவு -விசுவமடுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப் பிரிந்த.

**தவநாதன்** (மாசிலாமணி கிருஷ்ணதாஸ் -பன்குளம் - திருமலை)

**கிளியன்** (சுப்பிரமணியம் தனபாலசிங்கம் - விசுவமடு -முல்லைத்தீவு)

1987 -ம் ஆண்டு யாழ்- கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

திருமலை மாவட்டத் தளபதியும், மத்தியகுழு உறுப்பினருமான,

**லெப். கேணல் சந்தோசம்** ( கணபதிப்பிள்ளை உமைநேசன் - சந்தோசம் வீதி - அரியாலை)

யாழ் - பல்கலைக்கழகத்திற்கு அண்மிய பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லிங்கேஸ்** (மகாலிங்கம் லிங்கேஸ்வரன் - உரும்பராய் தெற்கு - யாழ்)

யாழ் - காரைநகர், பொன்னாலைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம்லெப். குட்டி** (மகாலிங்கம் ஜெயவர்த்தனா - நாயன்மார்கட்டு - நல்லூர் - யாழ்)

1988 -ம் ஆண்டு மட்டு - கல்லடிப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். திலக்** (யே குபேந்திரன்-கல்லடி -மட்டு)

மட்டு-கல்லடிப்பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**உதயன்** (சி. உதயகுமார் - நாவற்குடா - மட்டு

ஊர்காவற்றுறையில் இந்தியப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**உதயன்** (தெய்வேந்திரன் உதயசூரியன்- காரைநகர் -யாழ்

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளினால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

**வெங்கட் -செல்வா** (மகேந்திரன் யூட்மரியான் செல்வராஜன் - கோவில் ஒழுங்கை - யாழ்)

வல்லைவெளியில் தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

தமிழீழ மக்கள் மன்றத்தலைவரும், மாமனிதருமான,

**க.சிவானந்தசுந்தரம்** (பருத்தித்துறை)

1990 ம் ஆண்டு மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லிங்கம்** (முத்தையா மோகனராஜ் - இட்டம் பிட்டியா - மலையகம்)

**முத்து** (... ... ...)

1991 -ம் ஆண்டு யாழ் -மண்டைதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

## சிவராதா புடவை அகம்

16 B, மேஜர் சோதியா தெரு,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-10551)


# 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

## திதி 21.10.94





**2-ம்லெப். சத்தியசீலன்**
(கணேசன் ராஜ்சேகர்
சேகர்)

**செல்லையா கணேசன்**

| மலர்வு | வீரச்சாவு | மலர்வு | உதிர்வு |
|---|---|---|---|
| 1976.04.30 | 1993.11.01 | 1957.10.05 | 1993.12.30 |

(ஏழாலை வடக்கு, ஏழாலை)

மண்ணை ஆக்கிரமிக்க வந்த
சிங்கள படையை அழிக்க
மணலாற்றில் கால் பதித்து
என்றும் நிஜமாய் இருந்த - நீ
இன்று நிழலாய் ஆனது எம்மகனே
மண்மீட்க புறப்பட்ட காரணத்தால்
அக்கினி உன் அழகுடலை தீண்டியதோ
பாசம் கொண்ட காரணத்தால் 60 நாளில்
பண்புடனே வந்துவிட்டார் உன் தந்தை
உங்கள் இருவரின் இழப்பும்
எம்மை அக்கினிபோல் தீண்டுகின்றதே ......
உன் கால் தடங்கள் இருக்குமட்டும்
கவலை இல்லை எங்களிற்கு - வழிகாட்ட
வீர வரலாற்றை நாம் படைப்போம்;

ஏழாலையை பிறப்பிடமாக கொண்ட கணேசன், சத்தியசீலன் (சேகர்) இவர்கள் இருவரின் திதி 21-10-94 இன்றாகும், இந்நிகழ்வில் போராளிகள், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

33. அராலி வீதி, ஒட்டுமடம்,
(பொம்மை வெளி)

இருவரின் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்-

(9743)

---

1941.05.27

விண்ணிற்கு
21-09-1994



## அமரர் யோசவ் பெர்னாண்டோ

மட்டிலாக் கோமான் யோசவ் பெர்னாண்டோ
விட்டிந்த மாநிலத்தை விண்சென்று ஓர்திங்கள்
கிட்டியின்று வந்ததினால் கிறீஸ்த்துதனைக்
கரங்கூப்பி
விட்டபிழை மன்னித்து விண்ணேற்க வேண்டு
கிறோம்

வேண்டும் மனையாளும் மக்களும் சோதரரும்
அன்பிற் குரியாரும் அம்மான் மாமியரும்
அன்றில்லம் வந்தோர்க்கும் அனுதாபந்தந்தோர்க்கும்
நன்றிதனை நவின்று நாயகர்க்காய் இறைஞ்சுகிறார்;

'கலாபவனம்'
பானஷயூர்

மனைவி மக்கள்
சோதரர்கள், மாமன், மாமி,
உறவினர்

(9736)

---

## 31-ம்நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு
17-9-1944

இறப்பு
22-9-1994

### திருமதி
### குலசேகரம்பிள்ளை செல்லம்மா
### (சிறி)

நாளை 22-10-94 சனிக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

43, சிங்கன் வீதி
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்;

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகளும்
குடும்பத்தினரும்

(9739)

---

-யாழ்

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளினால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

**வெங்கட் -செல்வா** (மகேந்திரன் யூட்மரியான் செல்வராஜன் - கோவில் ஒழுங்கை - யாழ்)

வல்லைவெளியில் தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

தமிழீழ மக்கள் மன்றத்தலைவரும், மாமனிதருமான,

**ச.சிவானந்தசுந்தரம்** (பருத்தித்துறை)

1990 ம் ஆண்டு மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லிங்கம்** (முத்தையா மோகனராஜ் - இட்டம்பிட்டியா - மலையகம்)

**முத்து** (... ... ...)

1991 -ம் ஆண்டு யாழ் -மண்டைதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். பேபி** (கந்தையா பஞ்சலிங்கம் - களபூமி, காரைநகர் - யாழ்)

1992 -ம் ஆண்டு மட்டு - வெல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் தாமரை** (கந்தப்பர் சிவபாதம்- கோயில்போரதீவு - மட்டு)

**ஜீவராஜ்- தினேஸ்** (கந்தசாமிசிவநாயகம்-கிரான் குளம் -மட்டு)

**அழகேஸ்** (முத்தையா லோகேஸ்வரன் -நுணுகல - பதுளை)

யாழ் -வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் விரச்சாவெய்திய,

**செந்தூரன்-செல்வன்** (சிவராசா ஜெகதாசன் -அருண் வீதி மானிப்பாய் - யாழ்)

1993 -ம் ஆண்டு மட்டு- அம்பாறை, பட்டியடி வெட்டைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். சுதாகர்** (சீனித்தம்பி ரவிச்சந்திரன் -வாழைச்சேனை - மட்டு)

**2 ம்லெப். சிறிரஞ்சன்-ஜெயசீலன்** (ஆறுமுகம் கணேசமூர்த்தி - காரைதீவு - 03 -அம்பாறை)

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்.

யாழ் -பொன்னாலைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ஒளியிழை -லஜனி** (பரமேஸ்வரி சோமநாதப்பிள்ளை - சந்திவெளி - மட்டு)

**லெப். கோதை** (சாரதாதேவி சின்னத்தம்பி முனைக்காடு - மட்டு)

யாழ் மாவட்டத்தில் பயிற்சியின் போது தவறுதலாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த,

**இசையாளன் -சமன்** (மனுவல் கஜேந்திரன் பீச்றோட், குருநகர் -யாழ்)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ் பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10547)

# உடையாத விலங்குகள்

சீதனம் பற்றி அண்மையில் தான் இன்னொரு விவாதம் நடந்து முடிந்திருந்தது. சீதன முறைமைக்கு எதிராக பலரும் காலத்திற்குக் காலம் பலத்த கண்டனங்களை எழுப்புவதும் அதை உடலில் ஒட்டிய மணலைத்தட்டி விடுவது போல் இச்சமூகத்தின் செல்வாக்கு மிக்க தொகுதி உதறி விடுவதும் இன்று நேற்றைய கதையல்லவே. இச்சமூகத்தின் மனச் சான்றை இக் கண்டனங்கள் ஏன் உலுக்கவில்லை? என்கிற கேள்விக்கு இன்னமும் விடை கிடைக்காத நிலை. எனவே இன்று சீதனச் சிக்கலை ஏன் வீணாக கிளறுவான் என்றும் இது ஒரு தவிர்க்க முடியாத - நாம் வாழப் பழகிக் கொள்ள வேண்டிய ஒரு தீங்கென்று பலரும் நம்பத் தொடங்கிய நிலையே காணப்படுகின்றது. இத்தகைய சூழலிலே விடுதலைப் புலிகள் மகளிர் அணி சீதன முறைமைக்கு எதிராக வன்மையான கருத்தெதிர்ப்புபணியொன்றை மேற்கொள்வது பலருக்கு வியப்பாகவும் சிலருக்கு வேண்டாத சங்கதியாகியும் விட்டது. சீதன முறைமை என்பது அடியும் முடியும் அறியப்படாத ஒரு விசித்திரமான வினை எனப்பலரும்இப்போது விபரீதமாக நம்பத் தொடங்கும்நிலை. எனவே இத்தகைய பின்புலத்திலேயே அடேல் ஆன் ஆங்கிலத்தில் எழுதிய சீதனம் பற்றிய ''உடையாத விலங்குகள்'' (Unbroken Chains) என்கிற நூல் வாசிக்க கிடைத்த பொழுது ஏதோ சீதனம் பற்றிய ஆய்வுக் கட்டுரையாக்கும் என்றே முதலில் எண்ணத் தோன்றியது.

ஆனால் நூலின் அறிமுகவுரையைவாசிக்கத்தொடங்கும் போது எனது எண்ணம் எழுந்தமானமானது என்பதுபுரியப் பட்டது, தொடர்ந்துபடிக்கும் என்னுள் வேகமாக அதிர்ச்சியலையொன்று பரவியது வாசித்து முடிந்த பின்னோ உச்சம் தலையில் யாரோ ஓங்கிக் குட்டியது போலிருந்தது; உடல் விறைத்து மனம் கனத்தது. பல நூறாண்டு காலமாக சந்ததி சந்ததியாக இந்த யாழ்ப்பாணச் சமூகம் எத்தகையதொரு பாவச்சுமையை பாரம்பரியம் பண்பாடு தேசவழமை என்கிற பெயரில் சுமந்து வருகின்றது என்பதை உணர்ந்ததாலே இந்நிலையேற்பட்டது. அன்று தொட்டு இன்று வரை இவ் யாழ்ப்பாண சமூகம் எத்தகைய அச்சிலே சுழல்கின்றது என்பதையும் இச்சமூகத்தின் தொப்புள் கொடி இன்னமும் அறுக்கப்படாமல் இறந்த கால வரலாற்று சங்கிலியோடு பிணைக்கப்பட்டிருப்பதாலே சமூக மாற்றம் என்பது இன்னமும் சரிவராத சங்கதியாகவும் இருப்பதையும்

டும்; விலங்குகள் உடைக்கப்பட வேண்டும் என்பதே உடையாத விலங்குகளின் தோற்றத்திற்கு காரணமாகும்.

எனவே இத்தகைய அபூர்வமான நூல் தமிழ் கூறும் நல்லுலகிற்கு தனது நல்வரவை ஆங்கில மொழி மூலம் அறிவிக்கின்றது அதுவும் ஓர் ஆச்சரியம் தான். யாழ்ப்பாண சமூக அரசியல் வரலாற்றை விளக்கத் தக்க நேர்த்தியான பதப்பிரயோகங்கள் தொடர்ச்சியான ஆற்றொழுக்கு நடை எவரையும் கவரும் வண்ணம் உள்ளன. பொதுவாகவே இத்தகைய ஆய்வு நூல்களில் காணப்படும் வரட்டுத் தன்மை, ஒரு வித செயற்கை உணர்வு இந் நூலில் காணப்படாததும் மேலதிக சிறப்பாகி விடுகின்றது. உயிரோட்டத்துடன், உணர்வுபூர்வமாக அரசியல் அழுத்தத்துடன் இந்நூல் அமைகின்றது.

இவ்வாறு நீட்டிச் செல்வது வெறும் புகழ்ச்சி உரைகள் என எவரும் நினைத்தால் நூலை வாசிப்பதன் மூலமே இதன் உண்மையை உணர முடியும் சரி, அப்படிஎன்னதான் இந்த நூலிலே இருக்கின்றது?


மிகச் சுருக்கமாக செய்திகள் சொல்லப்பட்ட போதும் வாசித்த பின் அவை விரிவாகி முற்றிலுமாக உள்வாங்க முடிகின்றது அத்தோடுசொல்லப்படும் செய்தி எவ்வித தடைகளுமின்றி முழுமையாக வாசகர் மனதிலே பதியப்பட வேண்டும் என்கிற கவனம் எடுக்கப்பட்டிருப்பது நூல் முழுவதுமே தெரிகின்றது.

இந் நூல் மிக விரைவிலே பலத்த எதிர்ப்புக்களால் பெருத்த விவாதங்களையும்சந்திக்கப் போகின்றது என்பது எச்சந்தேகமும் கிடையாது. நூலாசிரியர் குறிப்பிட்டது போலவே ''தமிழ்மக்கள் இன்று எதிர்நோக்கும் மிகப் பாரிய சமூகச்சிக்கலான சீதன முறைமைக்குள்'' ஒரு நெடும் வரலாற்றுப் பாய்ச்சலையே அடேல் ஆன் நிகழ்த்தியிருக்கின்றார் தேச வழமையென்றும் ஆழ் கடலுக்குள்ளே புகுந்து சில அதிர்ச்சியூட்டும் தேட்டங்களை வெளிக் கொணர்ந்திருக்கின்றார் எனவே சீதன முறைமை என்பது பலர் நினைப்பது போல மணச் சடங்கின்

வேரோடிய மிக ஆழமாக நிறுவன மயப்படுத்தப்பட்டு சமூகத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாத வழமையாகிவிட்டது என்கிறார் ஆசிரியர். அது மட்டுமன்றி சீதன முறைமை வகைப்படுத்தப்பட்டுள்ள தேச வழமை விதிகள் பற்றிக் குறிப்பிடும் போது, ''இவற்றினை உற்று நோக்கும்போது யாழ்ப்பாண சமூக உருவாக்கம் என்பது நிலவுடமை அமைப்புகளும் சாதிய உறவுகளும் இறுகப் பின்னிப் பிணைந்த சிக்கலான பல்வேறுமுகம்கொண்ட ஒரு பொருண்மிய அமைப்பின் மேல் உருவாகியுள்ளது'' என எமதுசமூக உருவாக்கத்தை பிட்டு வைக்கிறார். இதனாலே அவர் சீதன முறைமையை 'ஒரு பண்பாட்டுப்பனிப்பாறை' [Cultural Ice berg] என உருவகப்படுத்துகின்றார்.

எனவே ஆசிரியரது நோக்கம் அவரே கூறுவது போல ''சீதன முறைமையை பற்றிய இந்நூலின் நோக்கம்எவ்வாறு இம்முறைமைபெண்களை ஒடுக்கும் ஒரு கருவியாக இன்றைய யாழ்ப்பாண பெண்ணின் வாழ்நிலையை மிக மோசமாக பாதிக்கும் காரணியாகிவிட்டது' என்பதை விளக்குவதாகின்றது. எனவே ''பெண்ணை ஒடுக்கும் நோக்கம் கொண்ட பரந்துபட்ட சமூக உறவுகளின் வலைப் பின்னலில் சீதன முறைமை என்பது இன்னமும்'உடைக்கப்படாதவிலங்கு' என்பதே முடிவாகின்றது. இக்கருவே நூலின் முதல் பகுதியில் வரலாற்று ரீதியாகவும் நூலின் இரண்டாம் பகுதியில் நடைமுறை ரீதியாகவும் மிகத் தெளிவாக விளக்கப்படுத்தப்படுகின்றது. நூலின் முதல் பகுதியிலே யாழ்ப்பாண மக்களின் தனித்துவமான தேச வழமைகள் எவ்வாறு டச்சுக்காரரால்ஆங்கிலேயரால்தமது ஆட்சியைஎதிர்ப்பின்றி நடாத்துவதற்காக தமது நிருவாகத்தைஇலகுவாகமேற்கொள்ள சட்டமாக்கப்பட்டது பற்றி விளக்கப்படுகின்றது. இங்கே சொல்லவேண்டிய முக்கிய செய்தி என்னவென்றால் இன்றைக்குமட்டுமல்ல இற்றைக்கு 300வருடங்கட்குமுன்னர்கூட ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்கள் தங்களது பெண்பிள்ளைகளை மணமுடிக்க வழியின்றி நிதியுதவி தேடி பணச் சேகரிப்புக்களை மேற் கொள்ள வேண்டிய

தாய் வழியாக பெண்பிள்ளைகட்கு போவது சீதனமென்றும் தந்தை வழியாக ஆண் மக்கட்கு செல்வது முதிசம் என்றும் வகைப்படுத்தப்பட்டதின் நோக்கம் என்னவென்பது அடேல் அவர்களால் மிக நுணுக்கமாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. தந்தை வழியாக பெறும் சொத்துக்களைப் பெறும் ஆண் மகன்




தனது சொத்தை எதுவும் செய்வதற்கு முழு உரிமையும் வழங்கப்படும் போது தாய் வழியாக சொத்துக்களைப் பெறும் பெண் மகள் தனது கணவனின்சம்மதமின்றிதனது சொத்துக்களை எதுவும் செய்ய முடியாது செய்துவிடுகின்றது தேசவழமை இங்கே தான் ஆசிரியர் பெரும் முரணொன்றை யாழ்ப்பாண சமூகத்தின் தந்தை வழி ஆண் மேலாதிக்கத்தை சுட்டுகின்

ஆதாரங்களையும் அவர் சுட்டுகின்றார்

தென்இந்தியாவின்திராவிட இனமக்களைச் சேர்ந்த மலபார் [கேரளப்பகுதி] போர்த்துக்கேயரே தென்னிந்திய மக்களை மலபார் என்று அழைக்கத் தொடங்கினர் மக்களிடையே தொடக்கத்தில் நிலவிய கூட்டுக் குடும்ப முறைக்குள்ளே காணப்பட்ட ''மருமக்கள் தாயம்'' என்கிறமுறையையும் அதனுள்ளே உள்ள ''தாய்வழி இல்லம்'' என்கிற நிலையையும் பின்னர் மலபார் மக்கள் இங்கு குடியேறிய போது இம்முறை இங்கு கொண்டுவரப்பட்டது. என்கிற கருத்தில் சில உண்மைகள் இருப்பதை ஏற்ற போதும் எதற்கும் சரியான வரலாற்றாதாரங்கள் இல்லை

கட்குள்ளே சொத்துக்கள் பரிமாறப்பட்டு ஆண் மேலாதிக்கத்தை நிறுவபயன்படும் ஒடுக்கு முறைக் கருவியென நிறுவுகின்றார்.

இந் நூலின் இரண்டாம் பகுதியே மிகக் காரசாரமானது யாழ்ப்பாண சமூகத்தினது மட்டுமல்ல மொத்தத் தமிழ் சமூகத்தின் அடிப்படைகளை கேள்விக் குறியாக்குகின்றது பல அபூர்வமான ஆழமான கேள்விகளை எழுப்புகின்றதுஇவற்றிற்குஊடாக சீதனம்என்பது காலம் காலமாக பெண்ஒடுக்குமுறைக்கருவியாக மேலும் அழுத்தம் பெறுவதோடு புதிய பரிமாணங்களும் இணைக்கப்படுவதை நடைமுறையில் அடேல் விளக்குகின்றார். குறிப்பாக சிங்கள பேரினவாத அரசுகளின் செயற்பாடுகளால் (பொருண்மிய மேம்பாடின்மை, உயிர் இழப்புக்கள் வெளிநாடு செல்லல்) சீதனச்சிக்கல் எவ்வாறு ஆகாயத்திற்கும் கொடிகட்டிப் பறக்கின்றது என்பது பற்றி மிகப் புதுமையான விளக்கம் தருகின்றார். அது போலவே வெளிநாட்டுப் பண வருகை என்பது எத்தகைய எழுதப்படாத மாற்றங்களை சீதன முறையில் கொண்டு வந்தது என்பதையும் மிகச் சுவையாக காட்டுகின்றார். பழைய தேச வழமைச் சட்ட வரம்பிற்குள் (நகை, நிலம், இல்லம்) சிக்காது உரொக்கப்பணம் என்பது சீதன வரிசையில் இடம்பெற்று தாய வழி சொத்தாக மகளுக்குசேராமல்மணமகன்குடும்பத்தினருக்குநன்கொடையாக அவர்களால் ஏப்பம் விடும் சொத்தாக மாறிவிட்ட விபரீதத்தையும் சுட்டுகின்றார் இவ்வாறாக பற்பலசிக்கல்களை - பெண்கள் எதிர்நோக்கும் இன்னல்களை பூரணமாக வரிசைப்படுத்துகின்றார். யாழ்ப்பாண பெண்ணின் சார்பாக வைக்கப்படும்மிகஆழமானஇவ்

ங்களாக கூறப்படுபவைஇன்று உடலியல்ரீதியாகமனிதகுலவரலாற்று வழியாக மறுதலிக்கப்படுபவை என்று தெளிவாக்குகின்றார். தாய்மைக்கு, பெண்மைக்கு பெருமதிப்பு கொடுக்கும் தமிழ்ப்பண்பாடுஉண்மையாயின் ஏன் பெண்ணைஇழிவுபடுத்தி இரண்டாம் தர நிலையில் வைத்து சொத்துடமை பேணும் பண்டப் பொருளாக்குவான் என கேள்வி எழுப்புகின்றார். இவை எல்லாவற்றையும்விட வேதனமில்லாத பணியாக பெண்கள் இல்லங்களிலே செய்யும் மிகச்சலிப்பூட்டும் பெரிதும்பொறுமையைச் சோதிக்கும் உடலுழைப்பு அதிகம் தேவைப்படும் உள்ளக வேலைகளின் [Domestic Work] பெறுமதி பற்றி வினாவெழுப்புகின்றார். ''வீட்டிலே சும்மாகத்தான் இருக்கின்றாள்'' எனபெண்கள்பற்றிகூறுவோர் இவ் உள்ளகப் பணிகளைப் பொதுமைப்படுத்தி நிறுவனமயமாக்கினால் அதற்கான செலவு மதிப்பீடு என்னவாகும் என்பதை அறிவார்களா? என பிரமிப்பூட்டும கேள்வியைத் தொடுக்கின்றார் இவை எல்லாவற்றிற்கும்மேலாக பெண்ணின் வாழ்வை அவளது இருப்பை அவளது சமூகப் பெறுமானத்தை சமூக அசைவியக்கத்தை இயக்கும் மையச் சக்தியாக ஆண் உருவாக்கப்படுத்தப்பட்டிருப்பதன்விளைவுகளை விலாவாரியாகவிபரிக்கின்றார்உயர்கல்வி கற்று உயர் பதவி வகிக்கும் பெண்கள் எவ்வாறு சீதன முறை மூலம் மட்டந் தட்டப்படுகிறார்கள் என்பதை விளக்கி இச் சமூகம் எத்தகைய பெறுமானத்தை கொண்டது என நெற்றியடிக் கேள்வியை நெறிப்படுத்துகின்றார்.

இவ்வாறு உலுக்கு உலுக்கு என்று இச் சமூகத்தை உலுக்கும் ஆன், இறுதியாக தேச வழமை பெண்ணுக்கு வழங்கும் தய்வழி சொத்துக்களை தக்கவைக்கசட்டரீதியான சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது பற்றியும் முழுமையாக பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த தக்க வகையில் சமூக, பொருண்மிய

## பாலகுமாரன்

வாதங்களுக்கு ஊடாக பல கேள்விகளை அடேல் எழுப்புகின்றார்.

இக்கேள்விகளை உடனடி

அறிவியல் சார் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியஅவசியத்தை வலியுறுத்தி முடிக்கின்றார்

நூற்றாண்டு காலமாக சந்ததி சந்ததியாக இந்த யாழ்ப்பாணச் சமூகம் எத்தகையதொரு பாவச்சுமையை பாரம்பரியம் பண்பாடு தேசவழமை என்கிற பெயரில் சுமந்து வருகின்றது என்பதை உணர்ந்ததாலே இந்நிலையேற்பட்டது. அன்று தொட்டு இன்று வரை இவ் யாழ்ப்பாண சமூகம் எத்தகைய அச்சிலே சுழல்கின்றது என்பதையும் இச்சமூகத்தின் தொப்புள் கொடி இன்னமும் அறுக்கப்படாமல் இறந்த கால வரலாற்று சங்கிலியோடு பிணைக்கப்பட்டிருப்பதாலே சமூக மாற்றம் என்பது இன்னமும் சரிவராத சங்கதியாகவும் இருப்பதையும் இந்நூல் தருக்க ரீதியாக விளக்குகின்றது. யாழ்ப்பாணச் சமூகம் 21-ம் நூற்றாண்டு நெருங்கும் இந்நிலையிலும் தேச வழமையென்னும் கோட்டைக்குள் சாதியம் என்னும் சிறைக்குள் சீதனம் என்னும் விலங்கு பூட்டிப் கொலுவோச்சும் விசித்திரத்தை இந்நூல் உணர்த்துகின்றது. இச்சமூகத்தை பிடித்துள்ள நோயை மட்டும் இந்நூல் இனம் காணவில்லை. நோய்க்கான மருந்தையும் உணர்த்துவதே இந்நூலின் சிறப்புமாகி விடுகின்றது அதாவது கோட்டைகள் தகர்க்கப்பட வேண்டும்; சிறைகள் திறக்கப்படல்வேண்

இந்நூல் மிக விரைவிலே பலத்த எதிர்ப்புக்களால் பெருத்த விவாதங்களையும்சந்திக்கப் போகின்றது என்பது எச்சந்தேகமும் கிடையாது. நூலாசிரியர் குறிப்பிட்டது போலவே ''தமிழ்மக்கள் இன்று எதிர்நோக்கும் மிகப் பாரிய சமூகச்சிக்கலான சீதன முறைமைக்குள்'' ஒரு நெடும் வரலாற்றுப் பாய்ச்சலையே அடேல் ஆன் நிகழ்த்தியிருக்கின்றார் தேச வழமையென்றும் ஆழ் கடலுக்குள்ளே புகுந்து சில அதிர்ச்சியூட்டும் தேட்டங்களை வெளிக் கொணர்ந்திருக்கின்றார் எனவே சீதன முறைமை என்பது பலர் நினைப்பது போல மணச் சடங்கின் போது மணப் பெண்ணுக்கு தாய்வழி மூலமான சொத்துக்களை வழங்கும் ஒரு சடங்கு அல்ல என்பதை அவர் நிரூபிக்கின்றார். பொருத்தமான உதாரணம் ஒன்றையும் இதற்கு அவர் கையாளுகின்றார் ஆழ் கடலுக்குள்ளே பாரிய பெரும்பகுதி அமிழ்ந்து மறைந்து நீர்மட்டத்திற்கு மேலே சிறிய பகுதி மட்டும் தெரியும் பாரிய பனிப்பாறைபோன்றதே இவ் நினைப்பு என்கிறார் ஆன் ஆழமாக ஆய்ந்து கொண்டு போகும் இச் சீதன முறைமையென்பது இறந்தகால தொன்மையான வரலாற்றுக்குள்ளே புதைந்து

பகுதியிலே யாழ்ப்பாண மக்களின் தனித்துவமான தேச வழமைகள் எவ்வாறு டச்சுக்காரரால் ஆங்கிலேயரால் தமது ஆட்சியை எதிர்ப்பின்றி நடாத்துவதற்காக தமது நிருவாகத்தை இலகுவாக மேற்கொள்ள சட்டமாக்கப்பட்டது பற்றி விளக்கப்படுகின்றது. இங்கே சொல்லவேண்டிய முக்கிய செய்தி என்னவென்றால் இன்றைக்குமட்டுமல்ல இற்றைக்கு 300 வருடங்கட்கு முன்னர் கூட ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்கள் தங்களது பெண்பிள்ளைகளை மணமுடிக்க வழியின்றி நிதியுதவி தேடி பணச் சேகரிப்புக்களை மேற்கொள்ள வேண்டிய நிலையிலிருந்தது; இந்நூலில் வரலாற்று ஆதாரத்தோடு சொல்லப்படுவது தான். இங்கே சீதனமும் சாதியமும் முன்னைய யாழ்ப்பாண நிலவுடைமை சமூகததின் உயர் குடியான வேளாளரின் சொத்துடமையைப் பற்றிய கோட்பாடுகளை விளக்கி நிற்பது தெளிவாகின்றது. ஏனென்றால் தேசவழமையில் வகைப்படுத்தப்பட்ட அடிமைகட்கும் குடிமகட்கும் ஏது சொத்து? தாய் வழியாகவும் தந்தை வழியாகவும் சொத்துக்கள் பெண் பிள்ளைகட்கும் ஆண்பிள்ளைகட்கும் பிரிக்கப்படுவதும்



தனது சொத்தை எதுவும் செய்வதற்கு முழு உரிமையும் வழங்கப்படும் போது தாய் வழியாக சொத்துக்களைப் பெறும் பெண் மகள் தனது கணவனின்சம்மதமின்றி தனது சொத்துக்களை எதுவும் செய்ய முடியாது செய்துவிடுகின்றது தேசவழமை இங்கே தான் ஆசிரியர் பெரும் முரணொன்றை யாழ்ப்பாண சமூகத்தின் தந்தை வழி ஆண் மேலாதிக்கத்தை சுட்டுகின்றார். ''தான் சார்ந்த சாதி காரணமாக சொத்துடமையை பெறும் பெண்ணோ, தான் சார்ந்த பால் (Gender) காரணமாக ஆண் அனுமதியின்றி எதுவும் செய்ய முடியாத - தனித்து இயங்க முடியாத விசித்திர முரண் நிலை'' இது என்கின்றார் ஆசிரியர் எனவே சீதனமும் சாதியமும் இணைந்த தேச வழமையென்பது யாழ்ப்பாண சமூகத்தின் சொத்துடமைக் கோட்பாடுகளையே குறித்து நிற்கின்றது என்பதே ஆசிரியர் வாதம் அதேவேளை இந்நூலின் முதல் பகுதியில் சீதனம் தொடர்பான வரலாற்று

தில் நிலவிய கூட்டுக் குடும்ப முறைக்குள்ளே காணப்பட்ட ''மருமக்கள் தாயம்'' என்கிறமுறையையும் அதனுள்ளே உள்ள ''தாய்வழி இல்லம்'' என்கிற நிலையையும் பின்னர் மலபார் மக்கள் இங்கு குடியேறிய போது இம்முறை இங்கு கொண்டுவரப்பட்டது. என்கிற கருத்தில் சில உண்மைகள் இருப்பதை ஏற்ற போதும் எதற்கும் சரியான வரலாற்றாதாரங்கள் இல்லை என்கிறார் ஆனால் அதே வேளை ஆரியப்பண்பாட்டிலிருந்து தோற்றம் பெற்ற இந்து சமய சட்டங்களுள் ''ஸ்திரி தனம் என அழைக்கப்படுவதற்கும் சீதனத்திற்கும் எவ்வித தொடர்புமில்லையென்று நிறுவமுற்படுகின்றார் எனவே தனது முதல் பகுதியின் ஈற்றில் பெண்வழிசொத்துடமை என்பது கணவன் அனுமதியின்றி எதுவும்செயற்படமுடியாதநிலையில் சீதனம் என்பது சந்ததி சந்ததியாக தாய் வழியாக பெண் மக்களுக்கு வழங்கப்பட்ட போதும் நிலவுடமை சமூகத்தின் ஒரு குறிக்கப்பட்ட குடும்ப உறவு

றாக பற்பலசிக்கல்களை- பெண்கள் எதிர்நோக்கும் இன்னல்களை பூரணமாக வரிசைப்படுத்துகின்றார். யாழ்ப்பாண பெண்ணின் சார்பாக வைக்கப்படும் மிக ஆழமான இவ்

தக்கவைக்கசட்டரீதியான சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது பற்றியும் முழுமையாக பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த தக்க வகையில் சமூக, பொருண்மிய

வாதங்களுக்கு ஊடாக பல கேள்விகளை அடேல் எழுப்புகின்றார்.

இக்கேள்விகளை உடனடியாக பெரும் விவாதமாக்க அவர் விரும்பாவிட்டாலும் இவை தீப்பொறியாக வாசிப்போர் மனதிலே பற்றிக் கொள்கின்றன யாழ் சமூகத்தின் மண ஏற்பாட்டு முறை தொடர்பாக இம்மண ஏற்பாட்டு முறை காரணமாக பெண், ஆண் என இரு பிரிவாக சமூக உறுப்பினர்கள் தனித்து பிரித்து வைக்கப்படுவதன் நியாயத்தை கேள்விக் குறியாக்கின்றார். பெண் மெலிய வள்மலர்போன்றவள் எனவே சார்ந்து வாழ வேண்டியவள், சொந்தமாக முடிவு எடுக்க முடியாதவள் என்கிற பெண்ணின் உடல்ரீதியான பலவீன

அறிவியல் சார் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியஅவசியத்தை வலியுறுத்தி முடிக்கின்றார் அடேல் அவர்கள் இவ் யாழ்ப்பாண சமூகத்தின் சமூக உறவுகளின் அடிப்படைகள் பற்றி கேள்வி எழுப்பியிருப்பது தெரிந்தோ தெரியாமலோ தமது முதுகில் சீதனமென்னும் பாவச் சுமையைச் சுமக்கும் ஆண்களும் இப் பாவச் சேற்றுக்குள்ளே புதைந்திருக்கும் பெண்களும் விழிப்புணர்வை பெற்று விடிவை நோக்கி நகர வேண்டுமென்பதற்காகவே என்பதால் இந்நூலை இவர்கள் ஒவ்வொருவரும் நிச்சயம் படித்தறிய வேண்டும் என்பதே என் அவா

**பாலகுமாரன்**

# செய்தியாளர்களின் யாழ். படையெடுப்பும்; அவர்களது உணர்வலைகளும்

**நிமலராஜன்**

உயிரைப் பணயம் வைத்து தமது இழந்த உரிமைகளை மீட்டிட போராடிக் கொண்டிருக்கும் மக்களை நேரில் கண்டுவியப்புற்றோம். இரண்டாம் உலக யுத்தம் என்ற ஒன்று யாழ்ப்பாணத்தில் நடந்திருக்குமேயானால் அதன் பிரதிபலிப்பு எவ்வாறு இருந்திருக்கும் என்பதை அழிந்து போயுள்ள கட்டடங்கள் கட்டியம் கூறி நிற்கின்றன.

இவ்வாறு தெரிவிக்கிறார் 'லக்பிம' சிங்கள வார இதழின் செய்தியாளர் விஜயபண்டார. கடந்த 13-ம் திகதி யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா அரச தரப்பு பிரதிநிதிகள் குழுவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் குழுவினருக்கும் இடையே ஆரம்பமான சமாதானத்திற்கான நல்லெண்ண அடிப்படையிலான முதல்கட்ட பேச்சுவார்த்தை குறித்த விபரங்களை நேரடியாகத் திரட்டிக் கொள்ளும் நோக்குடன் வந்திறங்கிய தென்னிலங்கை மற்றும் சர்வதேச பத்திரிகையாளர்களுடன் எமது வாசகர்களுக்காக சில மணி நேரங்களை செலவிட்டோம். தென்னிலங்கை பத்திரிகையான 'யுக்திய' நிருபரான திஸாநாயக்க 'நாம் யாழ்ப்பாணம் செல்ல விருப்பம் தெரிவித்த போதும் ஆரம்பத்தில் நடவடிக்கை பணியகம் பத்திரிகையாளர் இப்படி செல்வதை அனுமதிக்கப் போவதில்லை எனக் கூறியதுடன் ஒரு சிலருக்கு மட்டுமே தாம் அனுமதி வழங்கப் போவதாகவும் தெரிவித்தது. இதனை தொடர்ந்து சுதந்திர பத்திரிகையாளர் சங்கம் தனது சங்கத்தில் அங்கம் வகிக்கும் சகல பத்திரிகைகளுக்கும் அனுமதி வழங்க வேண்டும் என அரசாங்கத்தை வற்புறுத்தியது.

இதனைத் தொடர்ந்து அரசாங்கம் நடவடிக்கை பணியகத்திற்கு பல விதத்திலும் அழுத்தம் கொடுத்ததை அடுத்தே பத்திரிகையாளருக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட சில பத்திரிகைகள் சார்பில் ஒவ்வொரு வரை மட்டுமே அனுமதிக்கப் போவதாகவும் பணியகம் அறிவித்தது. இதன் போது அது வெளிப்படையாகவே வாராந்த பத்திரிகைகளான ராவய, யுக்திய, கினியிர, லக்பிம, ஹரயா போன்ற பத்திரிகையாளர் செல்வதை தாம் விரும்பவில்லை என தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர் பல அழுத்தங்கள் வழங்கியதன் மூலம் அப்பத்திரிகைகளுக்கு ஒருவர் மட்டும் அனுமதிக்கப்பட்ட போதிலும் பேச்சுவார்த்தை முடிந்தவுடன் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறவேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்திருந்தது.

காங்கேசன்துறைக்கு நாங்கள்வந்துசேரும்போதும்காலையில் கப்பல் ஏறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை கொழும்பில் இருந்து பி பி சி செய்தியாளர் ஜோர்ச் ஆர்னே பலாலி வரவிருப்பதாகவும் அவர் வரும்வரை கப்பல் புறப்படமாட்டாது என எமக்கு காரணம்கூறப்பட்டதுஇதனை தொடர்ந்து நாம் மிகுந்த கோபம் அடைந்தோம் இராணுவ அதிகாரிகளுடன் பலத்த வாக்குவாதங்களில் ஈடுபட்ட சிலர் அனுமதி மறுக்கப்பட்டதை தமது ஒலிப்பதிவு கருவி மூலம் ஒலிப்பதிவு செய்து கொண்டனர் பி பி சி செய்தியாளர் காலை பதினொரு மணிக்குதான்பலாலி வருவாரென்றும் வந்தபின்பே கப்பல் புறப்பட கடற்படை அனுமதி வழங்கப்படுமென கப்பல் தலைவர் தெரிவித்தார் இதனைத்தொடர்ந்து சிலர் கப்பலில் இருந்து கொழும்புடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினார்கள்

பலர் தமது நியாயமான கோரிக்கைகளை அரசிடம் முன்வைத்தனர் காலை 9 மணிக்கு அரசாங்கப் பிரதிநிதிகள் யாழ் பல்கலைக்கழகத்தில் இறங்கும்போது அவர்களை படம் பிடிக்கவேண்டும் மற்றும் பேச்சுவார்த்தை நடைபெறும் சூழ்நிலை போன்றவற்றை தெளிவு படுத்தி தமது வாதத்தை முன்வைத்தனர் இவர்களின் நடவடிக்கைளால் சீற்றம் அடைந்தகடற்படையினர் கப்பலை பருத்தித்துறைநோக்கிசெல்லுமாறுஅனுமதி வழங்கினர் இதனைத் தொடர்ந்துகுமாரி கப்பல் மூலம் சுமார் பத்து மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தோம்'' என்றார்

''பருத்தித்துறை வந்தடைந்த எம்மை இன்முகம் கொண்டு வரவேற்ற விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் தமது வாகனத்தில் ஏற்றி யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்தனர். அங்கே வந்ததும் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது தூதுக்குழுவினர் திட்டமிட்டபடி வந்தடைந்ததும் பேச்சு வார்த்தை ஆரம்பமாகி விட்டது என்ற செய்தி தான் அது. மிகுந்த சிரமப்பட்டு நடவடிக்கைகள் பணியகத்தின் அனுமதியை பெற்று இங்கு வந்தபோதும் குழுவினர் பல்கலைக்கழக மைதானத்தை வந்தடைந்தது முதல் பேச்சுவார்த்தையின் ஆரம்ப கட்டம் வரையில் ஒளிப்பதிவு செய்ய முடியாதுபோய் விட்டது ஏமாற்றத்தைத் தந்துள்ளது

யாழ்ப்பாணம் வருவதற்கு முதலில அனுமதிவழங்க மறுத்த நடவடிக்கைப் பணியகம் பின்பு அனுமதிவழங்கிய செயலானது ஆசைகாட்டி மோசம் செய்வது போல அமைந்துவிட்டது இது இவர்களின் திட்டமிட்ட சதி நடவடிக்கை என்றே கருதுகின்றேன் ஏனெனில் முதல்நாளே காங்கேசன் துறையை நாம் வந்தடைந்த போதிலும் மறுநாள் எட்டு மணிக்கெல்லாம் புறப்பட வேண்டிய கப்பலை நொண்டிசாட்டுகளை கூறிதாமதித்தது இந்த நேரத்தில தூதுக் குழுவினர் யாழ் சென்று விட்டனர் அதன்பின்பே நாம் யாழ் செல்ல அனுமதிக்கப்பட்டோம்நாம்இங்குவந்தடைந்த போது பேச்சுவார்த்தை ஆரம்பமாகிவிட்டதெனகிடைத்த தகவலானது அனைத்து பத்திரிகையாளர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது'' என்கிறார் ஏ பி சர்வதேச செய்திஸ்தாபன செய்தியாளரான குரூஸ்

முதல் சுற்று பேச்சுவார்த்தை முடிவுற்றதை தொடர்ந்து கிடைத்த இடைவேளையின் போது பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட குழு

(6ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# வைகறைப் பூக்கள்

ஈழநாதம் வன்னிப்பதிப்பு முதலாண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசுபெற்ற சிறுகதை

காலை நேரத்து மஞ்சள்வெய்யில் மண்மீது பரவத் தொடங்கியிருந்தது. கடிகார முள்ளை அடிக்கடி சந்தித்துத் திரும்பின என் கண்கள். என் மனதின்வேகத்தாலோ என்னவோ கடிகார முள் வெகுவேகமாக நகர்வது போன்றிருந்தது எனக்கு.

அதற்கேற்ப என் கரங்களும் வெகு வேகமாக தட்டிலிருந்த பூக்களை எடுத்து மாலையாக்கிக் கொண்டிருந்தன.

காலத்தின் நகர்வில் எத்தனையோ பேர் மறைந்து விடுகிறார்கள், என்பது உண்மைதான்: இயற்கையின் நியதிதான் ஆனால் எமது கிராமத்து மண்ணிலே பிறந்து வளர்ந்து ஒட்டி உறவாடிய அந்த மைந்தர்கள் காலத்தின் தேவைக்காய்த் தம்மை ஈந்து மாவீரர்கள் ஆன செய்தியை அனைவராலுமே ஜீரணிக்க முடியாமற்தானிருந்தது. அதனால் மறைந்தும் மறையாத அந்த மாவீரர்களைக் கிராமத்தின் மத்தியிலே சிலை வடிவில் அமைத்துத் திருப்தி செய்து கொண்டது அந்தக் கிராமம்.

ஆம், எங்கள் விட்டின் முன்னால் அமைந்துள்ள பிரதான வீதியில் பன்னிரு வேங்கைகளும் சிலை வடிவில் சிரித்துக் கொண்டிருந்து தம் கொள்கையின் உறுதிப்பாட்டை உணர்த்திக் கொண்டிருந்தனர்.

தினமும் அலுவலகம் செல்வதன் முன் அந்த மறவர்களுக்கு மலர் மாலை அணிந்து பூசிப்பதையும் என் காலைக் கடமைகளில் ஒன்றாக்கியிருந்தேன். அலுவலகம் புறப்படு முன் மாலைகளைப் புனைந்து அவர்களுக்குச் சூட்டிச் சென்றால் தான் எனது காலைக் கடமைகள் நிறைவுற்ற திருப்தி எனக்கு அந்தத் திருப்தி தரும் மகிழ்ச்சியில் அன்றைய அலுவலகப் பணிகளை என்னால் இன்பமாக ஆற்ற முடியும்;

வீட்டை அலங்கரிக்கப் பூக்களை நாடியகாலம் போய் இன்று நாட்டைக் காத்த நாள்வர்களுக்குக்காய் அதன் தேவை மாறியிருந்தது. வீட்டில் எனது உடமைகள் எதை யார் எடுத்தாலும் எனக்கு வராத கோபம் பூமரங்களில் பூக்களைப் பறித்தால் வந்து விடுகிறது யாராவது தேவைக்கு பூக்கேட்டு வந்தால் கூட என் குணம் அறிந்த அம்மா;

''அவனைக் கேட்டுப் பிடுங்குங்கள்'' என்று எச்சரிக்கையாகவே கூறி வைத்துவிடுவா.

அன்றும் கடிகார முள் மணி எட்டைத் தாண்ட முன் நான் அலுவலகத்தை அடைவதற்காய் அவசரமாக மாலைகளைக் கட்டிக் கொண்டிருந்தேன்.

''அம்மா... பூ அக்கா இல்லையோ...என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். இனியன் என் எதிரே வந்து நின்றான்;

அவன் பெயர்மாத்திரமல்ல முகமும் எப்போதும் இனிமையாகத் தானிருக்கும்.

''பொருத்தமாகத் தான் பேர்வைச்சிருக்கினம்''என்று நான் அவனுக்குச் சொன்ன சந்தர்ப்பங்களிலெல்லாம் அவன் முகத்தில் பிரகாசம் தெரிந்தது.

எமது கிராமத்தின் காவற் தெய்வங்களாக சிலையில் அமர்ந்து சிரித்துக் கொண்டிருக்கும் அந்த வீரர்களுக்கு நான் தினமும் பூமாலை சூட்டுவதால் அவன் எனக்கு வைத்த பெயர் ''பூ அக்கா''

வழமையை விட அன்று அவசரமாக வந்த இனியன் என்னிடம்.

''அக்கா... சண்டை தொடங்கினால் காயப்படுறவைக்கு முன் நின்று உதவி செய்யிறதுக்கு ஊர்ச்சனங்களிலை விரும்பிறவைக்கு முதலுதவி வகுப்பு வைக்கப் போறம். அதால... விரும்புறவையின்ரை பேரை எடுத்துத் தாங்கோ...''

என்றவாறே என்னை நோக்கினான் ''ஓம் இனியன்'' என்ற பதில் கிடைத்ததும் வந்த வேகத்துடனேயே திரும்பினான் அவன்

''என்ன... தம்பி அவசரமாய் போறியள்?' வெளி வாங்கில் படுத்தபடி இருந்த நோயாளியான எனது அம்மா இனியனிடம் பேசுவது என் காதில் விழுந்தது.

''ஓம் அம்மா... நிறைய வேலையிருக்கு'' பதில் சொல்லியவாறே இனியன் சைக்கிளை வேகமாக நகர்த்திக் கொண்டிருந்தான்.

அலுவலகத்திற்குப் புறப்படும் அவசரம் எனக்கு; என்னைவிட அவசரம் தெரிந்தது. எமது கிராமத்துப் பொறுப்பாளனான இனியனிடம்.

அவன் எமதுா கிராமத்துப் பொறுப்பாளனக நியமிக்கப் பட்டதிலிருந்து எமது கிராமத்தின் தேவைகள், மக்களின் பங்களிப்புக்கள், விழிப்புணர்வுகள் பற்றி எமது வீட்டில் அனைவருடனுமே அடிக்கடிவந்து கதைத்துச்செல்வது அவனது வழக்கம். அதற்கேற்ப அவனது சிந்தனைகள் செயல் வடிவம் பெறுவதால் வயது வேறுபாடின்றி கிராமத்திலுள்ள அனைவருமே ஒத்தாசையாயிருந்தனர். வயதில் இளையவனும் குணத்தில் இனியவனுமான அவனுக்கு எமது வீட்டில் மாத்திரமல்ல எமது கிராமத்திலேயே ஒரு தனி மதிப்பு.

தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு வேலைப்பளு காரணமாக இனியன் எமது வீட்டுக்கு வரவில்லை யென்றால்,

''எங்கே... அந்தத் தம்பி... இனியனைக் காணேல்ல...' என்றபடியிருப்பா அம்மா.

''உங்களை மாதிரி ஒன்றிரண்டு வேலையளே.. இனியனுக்கு.. எத்தினை --- வேலையள்...இயக்கவேலையளோடை -- எங்கட கிராமத்தின்ர தேவைகள் --- முழுப் பொறுப்பும்--

நான் விமர்சித்துக் கொண்டிருப்பேன். அம்மா கேட்டுக் கொண்டிருப்பா - உன்னிப்பாக;

**நிதர்சனா**

இந்தச் சின்ன வயதிலை எத்தனை பெரிய பொறுப்புணர்வு அவனிடம் எண்ணிப் பார்க்கவே எனக்குள் ஒரு வித மகிழ்வுடன் கூடிய வியப்பாக இருந்தது ''எங்கடை மண்ணின்ரை தேவை. எத்தனை வேகமாக எங்கடை பிள்ளையளை வளர்த்து விட்டிருக்குது'' எனது உள்மனம் எனக்கு இப்படிச் சொல்லிற்று.

அலுவலக வேலைகள் முடிந்து வீட்டிற்கு வந்த நான் இனியனின் வேண்டுகோளையிட்டு தங்கை வித்தியாவுடனும் கதைத்து ஒரு முடிவுக்கு வந்தேன். இணைந்து நின்று போராட்ட சூழலை உணர்ந்து செயற்படக் கூடியவர்கள் என என் மனதில் பட்ட கிராமத்தவர்கள் சிலரை நேரில் சென்று சந்தித்துக் கதைத்தேன். முதலுதவி வகுப்பிற் பயிற்சி பெறுபவர்களுக்கான பட்டியல் ஒன்று தயாரித்தாயிற்று என்ற நிறைவுடன் இருள் கவிந்த அந்தப் பொழுதில் கேற்றைத் திறந்து கொண்டு வீட்டினுள் வந்தேன். தங்கை வித்தியா விளக்கேற்றிக் கொண்டிருந்தாள்.

முற்றத்தில் போடப்பட்டிருந்த வாங்கில் இருந்தவாறே அப்பாவும் பக்கத்து வீட்டு சிதம்பரம் அண்ணரும் கதைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது அப்பாவின் குரல் அருகில் வந்த எனக்குத் தெளிவாகக் கேட்டது.

'',என்ன அண்ணை......... விழிப்புக் குழுவுக்குப் போற எல்லோருக்கும். காலமை ஆறு மணிக்குக் கூட்டம் எண்டு வரச் சொல்லிச்சினம்........ வேலை வில்லட்டி எல்லாத்தை விட்டுப்போட்டு... அங்க போனால் எத்தினை மணிக்குக் கூட்டம் தொடங்கிச்சினம்..

அப்பாவின் கருத்தைஆமோதிப்பது போல

ஓம் அண்ணை எட்டு மணிக்குப்பிறகுதானேஇனியன்தம்பி வந்திது .........அவைக்கென்ன என்றார் சிதம்பரம் அண்ணை

தங்கை வித்தியா குறுக்கிட்டாள்;

''அப்பா... ... இனியனுக்கு எத்தினை வேலை இருக்கும். நாட்டிலஎன்னென்னவோ நடக்கிறதுஉங்களுக்குஉங்கட கூட்டம் தான் முக்கியம் அப்படி என்ன அவசரம் உங்களுக்கு''

காட்டு மிராண்டிப் படைகள் செய்த அட்டூழியங்களிலிருந்து எங்களை விடுவித்து, மானம். கௌரவத்தோடை வாழ வழிகாட்டிய இன்றைய பரம்பரையினரின் இனிய கொள்கைகளை மறந்து வயோதிபங்கள் தம் வாய்க்கு வந்தபடி பேசிக்கொள்வது எனக்குள் எரிச்சலை மூட்ட,

'' இனியன் ஆக்கள் இல்லாட்டாத் தெரியும் உங்கட அவசரங்கள் ... ... இந்நேரம் ஆமிக்காரன் வெளிக்கிட்டிருப்பான். ஊரைவிட்டே ஓடியிருப்பியள். இப்ப வீடு வாசலில் ஒழுங்கா இருக்கிறமெண்டால் அது அவையாலைதான் எண்டதை மறந்திடாதேங்கோ... ... ...'

என்றேன் சிறிது கோபத்துடன் படுத்திருந்த அம்மாவும் பதிலுக்குத் தன் கருத்தைக் கூறி முடித்தாள்.

'' சும்மா சொல்லப்படாது ஒரு ஊரைக் கட்டி அவுக்கிறதெண்டால் இலேசான காரியமே ... ... —

... ... ... அந்தக் காலத்திலை ... ... ... விதானைமார் செய்த வேலையளையெல்லாம் ... ... ... இப்ப இந்தச் சின்ன வயசில இந்தப்பிள்ளையள் எவ்வளவுவிளக்கமாச் செய்யுதுகள் ... — ...''

'' எங்களால எங்கட எங்கட வீட்டுப்பிரச்சினைகளையேசமாளிக்கமுடியேலை அவங்களும் எத்தனை எண்டுசெய்யிறது'' எல்லோர் கருத்தும் ஒருபக்கமாக இருப்பதால் தானும் அவ் வழிக்கு வந்தசிதம்பரம் அண்ணை தன் கருத்தைச் கூறிச் சமாளித்தார்.

மறுநாட் காலையும்வழமை போலவே மலர் மாலைகளால் என் மனதில் நிறைந்தவர்களைத் தரிசித்து நான் அலுவலகம் புறப்படுமுன்.

''அம்மா இந்தாங்கோ... இந்தக் கடதாசியை இனியவன் வந்தா ... குடுங்கோ''

என்று நான் எழுதி வைத்திருந்த பெயர்ப் பட்டியல் அடங்கிய காகிதத்தை மடித்து அம்மாவிடம் நீட்டினேன்.

படுக்கை நோயாளியான அம்மா படுத்திருந்தவாறே தன் இரு கைகளாலும் அதனை வாங்கித் தன் தலையணைக் கடியில் பத்திரப்படுத்திய விதம் இனியனிடம் அவள் கொண்டிருந்த விசுவாசத்தையும் அதனோடு இந்த மண்ணின் தேவைகள் மீது அவள் கொண்டிருந்த அக்கறையையும் எனக்குத் தெளிவாக்கிய போது என்னுள் ஒருவிதமான நிறைவு ஏற்பட்டது.

போராட்டத்தை - அதன் தேவையைப் புரிந்து கொண்டவர்களும் எம் மண்ணில் இருப்பதால் தானே குறுகிய காலத்தில் வெகு வேகமான வளர்சியை கண்டிக்கிறது எம் போராட்டம் என்ற நினைப்பு என்னுள் நிறைந்து நின்றது.

அலுவலகப் பணிகள் முடிந்து நண்பிகள் சகிதம் வீடு நோக்கி வந்துகொண்டிருந்த என்னை விலத்திச் சென்ற அந்த ஒலிபெருக்கி வாகனத்தின் செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது.

''எதிர்பாராத மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் இனியனது வித்துடலுக்கு இறுதி மரியாதை செலுத்த விரைந்து வாருங்கள்'' என அழைத்துக் கொண்டிருந்தது அந்த ஒலி பெருக்கிச் செய்தி,

என் காதுகளால் நம்ப முடியாத அந்தச் செய்தி என் கால்களின் வேகத்தைக் கூட்ட வித்துடல் வைக்கப் பட்டிருந்த அந்தச் சந்தை மைதானத்தை என் துவிச்சக்கரவண்டி எப்படி அடைந்ததோ எனக்குத் தெரியாது.

அங்கே ''பூ அக்கா ...... பூ அக்கா''என என்னை இனிமையாக அழைக்கும் அந்த இனிய தம்பி - இனியன் பூக்களால் அலங்கரிக்கப் பட்ட பெட்டியினுள் ஆறுதலாகப் படுத்திருந்தான் கண்களில் முட்டி வழிந்த கண்ணீரை துடைத்து விட்டு அவன் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிய நான் கவலையுடன் வீட்டை அடைந்த போது,

''பிள்ளை... தம்பி இனியன் இண்டைக்கு வரேல்லை என்ற அம்மாவின் குரல் கேட்டு என் இதயமே வெடித்து விடும் போன்றிருந்தது' பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டேன்.

நான் பதிலுக்கு எதுவுமே கூறாததால் அம்மா திரும்பவும்,

''இனியன் தம்பி வரேல்லைப் பிள்ளை'' என்றவாறு நான் கொடுத்துச் சென்ற அந்தப் பெயர்ப்பட்டியலை என்னிடம் நீட்டினார்.

என்னால் எதுவுமே அப்போது பேசமுடியவில்லை. என் கரங்கள் மாத்திரம் அம்மா நீட்டிய அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டன.

# மூழ்காது என இறுமாந்த டைடானிக் கன்னிப் பயணத்திலேயே மூழ்கிய பரிதாபம்

இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் டைடானிக் அமிழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் அந்தக் கடல் பரப்பில் பனிமலையினால் தனக்கு ஆபத்து வரக்கூடுமென்பதற்காக 8மைல்களுக்கு அப்பால்

யளவில் தனது ஒதுக்கிடத்திற்குப் போய்விட்டார்.

டைடானிக் பனிமலையில் மோதுவதற்குப் பத்துநிமிடங்கள் முன்பாக மேற்படி சம்பவம் நடந்தது.

வானொலிஇயக்குநர் தனது ஒதுக்கிடத்திற்குப் போய்விட்

லிறறு.

தேன். அலுவலகம் புறப்படு முன் மாலைகளைப் புனைந்து அவர்களுக்குச் சூட்டிச் சென்றால் தான் எனது காலைக் கடமைகள் நிறைவுற்ற திருப்தி எனக்கு அந்தத் திருப்தி தரும் மகிழ்ச்சியில் அன்றைய அலுவலகப் பணிகளை என்னால் இன்பமாக ஆற்ற முடியும்.

பேர்வைச்சிருக்கினம்'' என்று நான் அவனுக்குச் சொன்ன சந்தர்ப்பங்களிலெல்லாம் அவன் முகத்தில் பிரகாசம் தெரிந்தது.

எமது கிராமத்தின் காவற் தெய்வங்களாக சிலையில் அமர்ந்து சிரித்துக் கொண்டி சொல்லியவாறே இனியன் சைக்கிளை வேகமாக நகர்த்திக் கொண்டிருந்தான்.

அலுவலகத்திற்குப் புறப்படும் அவசரம் எனக்கு; என்னைவிட அவசரம் தெரிந்தது. எமது கிராமத்துப் பொறுப்பாளனான இனியனிடம்.

அலுவலக வேலைகள் முடிந்து வீட்டிற்கு வந்த நான் இனியனின் வேண்டுகோளையிட்டு தங்கை வித்தியாவுடனும் கதைத்து ஒரு முடிவுக்கு வந்தேன். இணைந்து நின்று போராட்ட சூழலை உணர்ந்து செயற்ப

இனிய கொள்கைகளை மறந்து வயோதிபங்கள் தம் வாய்க்கு வந்தபடி பேசிக்கொள்வது எனக்குள் எரிச்சலை மூட்ட,

''இனியன் ஆக்கள் இல்லாட்டாத் தெரியும் உங்கட அவசரங்கள் ……… இந்நேரம் ஆமிக்காரன் வெளிக்கிட்டிருப்

இந்த மண்ணின் தேவைகள் மீது அவள் கொண்டிருந்த அக்கறையையும் எனக்குத் தெளிவாக்கிய போது என்னுள் ஒருவிதமான நிறைவு ஏற்பட்டது.

போராட்டத்தை - அதன் தேவையைப் புரிந்து கொண்

என்னிடம் நீட்டினாள்.

என்னால் எதுவுமே அப்போது பேசமுடியவில்லை. என் கரங்கள் மாத்திரம் அம்மா நீட்டிய அந்தக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டன.

# மூழ்காது என இறுமாந்த டைடானிக் கன்னிப் பயணத்திலேயே மூழ்கிய பரிதாபம்

**கே. சி. இராமநாதன்**

**பாதுகாப்பான கடல் பயணத்திற்கு ஏற்றதும், எந்த நிலையிலும் நீரில் ஆழ்த்த விட முடியாதது என்றும் கருதப்பட்ட "டைடானிக்" நீராவிக் கப்பல் தனது கன்னிப் பயணத்திலேயே வட அத்திலாந்திக்கின் குளிர்ந்த நீரில் மூழ்கியது. இது ஒரு பனிமலை விளைவித்த பயங்கரமாகும்.**

வான் பரப்பில் நட்சத்திரக் கூட்டங்கள் பிரகாசிக்க அத்திலாந்திக் சமுத்திரம் கொந்தளிப்பின்றி அமைதியாகத் தோன்றியது.

பிஹறட்றிக் பிளீற் (FREDRIC FLEET) என்ற கப்பலின் கண்காணிப்பாளன் காவல் பணி மேடையில் பணியில் ஈடுபட்டிருந்தவேளை திடீரென அவன் கண் முன்னே தோன்றிய காட்சி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

'உயர்ந்த பனிமலை ஒன்று கப்பலுக்கு எதிரே காணப்படுகின்றது'' என்ற திடுக்கிடும் செய்தி கப்பல் தலைவனுக்கு உடனே தொலைபேசி மூலம் கொடுக்கப்பட்டது. கப்பல் தலைவனுக்கு அந்தத் திடுக்கிடும் செய்தி கிடைத்த இரண்டு மணி நாற்பது நிமிடங்களுக்குள் எல்லாம் முடிந்து விட்டது.

பாதுகாப்பான கடல் பிரயாணத்துக்கு ஏற்றதும், எந்த நிலையிலும் நீரில் ஆழ்த்தி விட முடியாததும் என்று எல்லோராலும் கருதப்பட்ட வெண் நட்சத்திர ''டைடானிக்'' என்ற பெயர் தாங்கிய நீராவிக் கப்பல் வட அத்திலாந்திக் கடலின் குளிர்ந்த நீரினுள் முற்றாக அமிழ்ந்து விட்டது.

குறிப்பிட்ட இரண்டு மணி நாற்பது நிமிடங்களுள் அதில் பிரயாணம் செய்த 2300 கடல் பிரயாணிகளுக்கும் அச்சமயம் ஏற்பட்ட அனுபவத்தைக் குறிப்பிடுவதாயின் முதலில் அவநம்பிக்கையும், பின்னர் பயப்பிராந்தியும் முடிவில் சொல்லொணா நரக வேதனையும் அனுபவித்தார்கள்.

1912-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி இரவு 11-40 மணியளவில் எதிர்பாராமல் வந்த செய்தியை அறிந்தவுடனே அந்தப் பிரம்மாண்டமான கப்பல் இடதுபுறமாகத் திருப்பப்பட்டது. ஆயினும் அதற்கு முன்னே பனிக்குன்றின் கூர்மையான முனையில் கப்பல் மோதிவிட்டது.

நீர்மட்டத்தின் கீழே 300 அடி நீளமான திறந்த வெடிப்பினூடாக கடல் தண்ணீர் தளத்தினுள் புகத் தொடங்கி விட்டதென்பதை அறிந்து கொள்ளாமல் மேடை மேல் கூடிநின்ற உயர் அதிகாரிகள் எப்படியோ ஆபத்திலிருந்து தப்பிவிட்டதாக எண்ணித் தாமே தம்மைப் பாராட்டிக் கொண்டார்கள்.

கப்பலின் சிறுதிறப் பணியாளருள் ஒருவரான ஜோர்ஜ் றோவ் (George Rowe) என்பவர் தனது அனுபவங்களைக் கீழ்க்கண்டவாறு வர்ணித்தார்:

''கப்பலினூடாக ஒரு அசாதாரணமான நடுக்கம் பரவியிருந்தது. அப்போதே பேராபத்து கப்பலைநெருங்கிவிட்டதென்பதை உணர்ந்துகொண்டேன் பனிக்கட்டியொன்று குளிர்ந்த காற்று வீசியதனால் எனது மூச்சு உறைந்து போனது அப்புறம் பிரமாண்டமானமிதக்கும்பனிமலையைக் கண்டேன், அதை என்னால் எப்போதும் மறக்க முடியாது எனது கண்ணோட்டத்தில் கப்பலின் வலது புறமாக ஏதோ ஒன்று நழுவிச்செல்வது போலிருந்தது முதலில் ஒரு சரக்குக் கப்பலுடன் மோதிவிட்டதாக எண்ணினேன், சாளரங்களினூடாக வெளிப்பட்ட ஒளியில் அது ஈரமான கப்பல் பாய்த்துணி போன்றிருந்தது.

கப்பலின் பக்கத்தே ஓடிப்போய் பார்த்த போது அது ஒரு பனிமலையென்பது தெளிவாயிற்று வான மண்டலத்தை தொட்டுக் கொண்டிருப்பது போல்தோன்றியது அந்த ராட்சத பனிமலை, கோபுரம் போல் உயர்ந்து பாலத்திற்கு மேலாகவும் பரவி நின்றது.

நம்பமுடியாமல் ஒரு சில வினாடிகள் அதனைப்பார்த்துக் கொண்டிருந்தேன். சில அடிகளுக்கு அப்பால் நின்ற அதனைத் தொட்டுப் பார்க்க முடியும் போலிருந்தது. அடுத்த நிமிடம் அங்கிருந்து அகன்று காரிருளினுள் மறைந்து விட்டது

உலகிலேயே புதுமையான 'டைடானிக்' கப்பலின் அடிப்பாகம் உடைந்து பிளவுண்டு போனதை அறிந்த பின்பும் வெண்நட்சத்திர கப்பல் கூட்டத்தின் தலைவர் கப்டன் ஏணஸ்ட் சிமித் (Earnest Smith) அவர்களிடமிருந்து எந்த விதமான பீதியும் வெளிப்படவில்லை,

''எப்படியாயினும் டைடானிக் அமிழ்த்த முடியாதது''

நான்கு நாட்களுக்கு முன்பு சவுதாம்டன் (Southamton துறைமுகத்திலிருந்து நியூயோக் (Newyork) துறைமுகம் நோக்கித் புறப்பட்ட கப்பலின் கன்னிப்பயணத்தின் தொடக்கத்தில் ''டைடானிக்'' அமிழ்த்தமுடியாதது'' என்று ஐம்பமாகப் பெருமையுடன் கூறிக் கொண்டார்கள்

850 அடி நீளமுள்ள கப்பலின் அடிப்பாகம் தண்ணீர் புகாவண்ணம் கட்டப்பட்ட 14 பாகங்களைக் கொண்டது. மேலும் அடிப்பாகம் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகவும் பாதுகாப்பானதும் அடியில் தண்ணீர் புகா வண்ணம் கட்டப்பட்டதுமான கப்பலின் நான்கு தட்டுகளும் முற்றாக நிரம்பி விட்டாலும் டைடானிக் மேலே மிதந்து கொண்டிருக்கக் கூடியதெனக் கருதப்பட்டது ஆனால் ஐந்தாவது அறைத் தடுப்பையும் பனிமலை குடைந்து விட்ட காரணத்தினால் மேலே தண்ணீர் நிரம்பத் தொடங்கி விட்டது.

முதல் நான்கு தட்டுக்களுக்குள்ளும் வெள்ளம் நிரம்பி ஐந்தாவது தட்டும் நிறைந்து விட்டால் பின் 6, 7, 8-ம் தட்டுக்கள் நிரம்பி கப்பல் முற்றாக மூழ்கி விட அதிக நேரம் தேவையில்லை.

புராணக் கதைகளில் கூறப்படுவதுபோல் 'டைடானிக்' அமிழ்த்தி விடமுடியாததென்பது மனிதன் விடும் தவறுகளுள் நம்புதற்கரிய ஒன்றாகும். அவ்விதமான நம்பிக்கை ஏற்படாதிருந்தால் மேற்படி கப்பலும் 1513 உயிர்களும் பிரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

பாரிய ஐஸ்மலைப் பிண்டம் அப்பகுதியில் சுற்றுவதாக வானொலி எச்சரிக்கை கிடைத்த பின்னும் எக்காரணம் கொண்டும் அதிகபட்ச வேகமான 22 நொட் வேகத்தில் டைடானிக் செலுத்தப்பட வேண்டும்?

பால்டிக் (Baltic) என்ற கப்பலிலிருந்து ''பனிமலை இருக்கும் திசையை நோக்கி 'டைடானிக்' போய்க்கொண்டிருக்கிறது'' என்ற செய்தி கிடைத்த பின்னும் வேகம் குறைக்கப்படவில்லை. பால்டிக் கப்பலின் செய்தியைப் பெற்றுக் கொண்ட முகாமையாளர் பிரயாணிகள் சிலரிடம் அதைக் காண்பித்த பின் அதனை கடல் நெறிச் செய்தி அறையில் வைக்கப்பட்ட நேரம் இரவு 7.15 மணி

மற்றக் கப்பல்களுடன் வானொலித் தொடர்பு என்ன காரணத்தினால் இயங்கவில்லை? முடிவாக இரவு 9.40 மணியளவில் ஆபத்தை விளக்கும் எச்சரிக்கை மெசாபா (Messaba) என்ற கப்பலினால் கொடுக்கப்பட்டு அச் செய்தி டைடானிக்கை வந்தடைந்ததாயினும் அது கிடைத்ததாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அச் செய்தி கப்டன் சிமித்தின் கவனத்தைப் பெற்றிருந்தால் 1513 உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கலாம். ஒரு மணித்தியாலம் முன்பாக காவல் பணி மனையில் இருந்தவர்களுடன் பனிமலையினால் விளையக் கூடிய ஆபத்துக்களைப்பற்றி கப்டன் சிமித் உரையாடிக் கொண்டிருந்தாராயினும் வேகத்தைக் குறைக்க வேண்டுமெனக் கருதவில்லை.

2300 பிரயாணிகளுக்குத் தேவையான 48 உயிர்காக்கும் படகுகளை ஏற்றிச் செல்லக் கூடிய துணைக் கருவிகள் இருந்தும் ஏனோ குறைந்த எண்ணிக்கையிலான 16 உயிர்காக்கும் படகுகளுடன் பிரயாணம் மேற்கொள்ளப்பட்டது. 46328 டன் நிறையுள்ள டைடானிக்கப்பலுக்கு இது பெரும் குறைபாடு.

இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் டைடானிக் அமிழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் அந்தக் கடல் பரப்பில் பனிமலையினால் தனக்கு ஆபத்து வரக்கூடுமென்பதற்காக 8 மைல்களுக்கு அப்பால் கலிபோனியா (California) என்ற கப்பல் நிறுத்தப்பட்டிருந்தது. கடல் நீர்மட்டத்தின் கீழ் டைடானிக் அமிழ்ந்து விட்டதென்ற அபாயச் செய்தியை அறிந்து கொண்டபின்னும் அதன் உதவிக்கு மிகவும் தாமதமாகவே வந்தது.

பனிக்கட்டிப்பாறைகளினால் அவ்விடத்தில் அபாயம் நேரலாமென்ற செய்தியை 6000 டன் எடையுள்ள பிரயாணக்கப்பலான கலியோனியா முன் கூட்டியே கொடுத்திருந்ததாயினும் அதன் பிரயாணத்தின்போது அன்றிரவு குறிப்பிடத்தக்க அசம்பாவிதம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை.

அன்று சாயங்காலம் பனிமலையினால் ஆபத்து வரக்கூடுமென்ற செய்தியை வானொலி இயக்குநர் கொடுப்பதற்குப் பலவிதமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் டைடானிக் பிரயாணிகள் எவரும் அச் செய்தியை அறிந்து கொண்டார்களில்லை மாறாக அவருடைய முயற்சிகளுக்கெல்லாம் பரிசாக அங்கிருந்து வந்த வசைமொழிகளினால் அடக்கி இழிவுபடுத்தப்பட்டார்

கலிபோனியாவின்வானொலி இயக்குநர்முடிவாக வானொலிப்பெட்டியை மூடி விட்டு தனது கடமையை முடித்துக் கொண்டு இரவு 11.30 மணியளவில் தனது ஒதுக்கிடத்திற்குப் போய்விட்டார்.

டைடானிக் பனிமலையில் மோதுவதற்குப் பத்துநிமிடங்கள் முன்பாக மேற்படி சம்பவம் நடந்தது.

வானொலிஇயக்குநர் தனது ஒதுக்கிடத்திற்குப் போய்விட்டபின்பு கலிபோனியாவின் மூன்றாவது அதிகாரி பிரகாசமானவெளிச்சத்துடன்டைடானிக் தாங்கள் நிற்கும் திசையைநோக்கி விரைந்து வருவதைக் கப்டன் ஸ்டான்லிலோட் (Stanley Lord) டின் கவனத்திற்கு கொண்டுவந்தார். தங்களின் வானொலிச் செய்திகளுக்கெல்லாம் கிடைத்த மரியாதைக் குறைவான வரவேற்பைப் பொருட்படுத்தாமல் அபாயச் செய்தி ஒளிச்சைகை மூலம் மீண்டும் கொடுக்கப்பட்டது.

மோர்ஸ் (Morse) என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட வெளிச்சம் மூலம் காட்டும் தந்திப்பதிவுக் குறியீட்டு முறையில் வெளிச்சம் காட்டப்பட்டது. இதற்கும் டைடானிக்கினிடமிருந்து பிரதிபலிப்பு எதுவும் வராமல் போகவே மீண்டும் மீண்டும் வெளிச்சக்குறியீட்டுச் சைகை காட்டப்பட்டதாயினும் எவ்வித பயனுமளிக்கவில்லை. டைடானிக் நேராக பனிமலையை நோக்கி விரைந்தோடியது.

கப்பல் ஒரு பக்கமாகச்சாய்வதை அவதானித்த பிரயாணிகள் முதலில் பதற்றமடைந்தார்களேயன்றி அச்சம் கொள்ளவில்லை என்னநிகழ்ந்துவிட்டதென்பதை அறிய மேலேறிச் சென்று பார்த்த போது பீதி கொள்வதற்கான அறிகுறிகள் எதுவும் தென்ப

(7 ஆம் பக்கம் பார்க்க)

# சுவிஸ் அரசின் கபட நாடகத்தில் — சிக்கிய குடும்பஸ்தரின் கண்ணீர்க்கதை




சந்திப்பு-சசீகரன்

விசாரணைக்கென அழைத்துச் சென்ற பொலிசார் முப்பத்தாறு மணி நேரம் இருட்டறையில் பூட்டி வைத்திருந்த பின் கைகளுக்கு விலங்கிட்டு விமானத்தில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பி வைத்தனர் என வேதனையுடன் கூறுகிறார் குடும்பஸ்தர் ஒருவர்.

அரசியல் தஞ்சம் கோரி சுவிஸ் நாட்டிற்கு அகதிகளாகச்சென்ற வெளிநாட்டவர்களில் 1992இற்குப் பின்பு சென்றவர்களை திருப்பி அனுப்புவதில் சுவிஸ் அரசு தீவிரம் காட்டி வருவது தெரிந்ததே.

சுவிஸ் அரசின் இம்முடிவை உலக அமைப்புகள் பல வன்மையாகக் கண்டித்ததுடன் மீள் பரிசீலனை செய்யுமாறும் கோரிக்கைகளை விடுத்திருந்தன.

எனினும் சுவிஸ் அரசு தனது நிலைப்பாட்டிலிருந்து பின் வாங்கியதாகத் தெரியவில்லை. அதன் முடிவிற்கு முதல் இலக்கானவர்தான் சுன்னாகத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி.

அண்மையில் சுவிஸ் அரசினால் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட அவர் பட்ட அனுபவங்களை எமது வாசகர்களும் தெரிந்து கொள்ளட்டும் என்ற நோக்கில் சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் சென்று சந்தித்தோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு ஒருவருடத்திற்கு மேலாக கொழும்பில் தங்கி அலைந்து திரிந்தபின் ஒருவாறாக சுவிஸ் நாட்டிற்குள் நுழைந்தேன். அங்கு உறவினர் ஒருவருடன் சில நாட்கள் தங்கியிருந்த பின் கடந்த வருடமுற்பகுதியில் அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்தேன்.

அதன்பின் ஒருசில மாதங்கள் தற்காலிக முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டேன் பின்பு ருதி (Ruthi) எனும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த ''Aufnahmentrum'' எனும் முகாமில் தங்க வைக்கப்பட்டேன். இந்த முகாமில் சகல வசதிகளும் இருந்தன. காலையில் பாணும் மதியம் மற்றும் இரவிற்கு சோறு, நூடில்ஸ் போன்ற உணவு வகைகள் பரிமாறப்படும்.

இம் முகாமில் இருக்கும் போது நான் வெளியே சென்று வர அனுமதித்தனர் சிலர் வெளியில் வேலைகளும் செய்தனர். வெளியில் செல்லும் போது தங்கியிருக்கும் இடத்தின் விலாசம் கொடுக்கப்பட வேண்டும். பதினைந்து நாட்களுக்குள் முகாமுக்குத் திரும்பி விடல் வேண்டும். ஏனெனில் மாதத்தில் இரு வாரங்கள் நாம் தங்கியிருக்கும் முகாமில் வேலை செய்ய வேணும், முகாமில் உள்ளவர்களின் உடைகளை உலர்த்தி அழுத்தி மடித்துக் கொடுத்தல், முகாமிற்குள்ளும் வெளியேயும் துப்பரவு செய்தல் போன்ற வேலைகளில் முகாமில் உள்ள அனைவரும் சுழற்சி முறையில் ஈடுபடல் வேண்டும்.

முகாமில் பல நாடுகளைச் சேர்ந்தவர்களும் அகதிகளாக தங்கியுள்ளனர். அங்கு சுவிஸ் நாட்டைசேர்ந்தவரேபொறுப்பாகவுள்ளார். அவர் எம்முடன்உட்கார்ந்தே உணவு அருந்துவார் எந்தவிதபாகுபாடும் காட்டுவதில்லை மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவார்.

இம்முகாமில் இருக்கும் போது எமக்கு மூன்று வேளை உணவும் இலவசமாக தரப்பட்டதுடன் மூன்று பிராங் (இலங்கை காசிற்கு நூறு ரூபாய்) நாளாந்தம் கைச் செலவிற்காகவும் தந்தார்கள். பத்து மாதங்கள் வரை இம் முகாமில் வைத்திருந்த பின் இறுதியாகஸ்ரட் (Staad) எனும் இடத்தில் உள்ள முகாமிற்கு மாற்றினார்கள். அங்கு எமக்கு சகல வசதிகளும் வழங்கப் பட்டதுடன் அகதிப்பணமாகபத்தாயிரம் ரூபா வரையில் தந்தார்கள் நாம் விரும்பினால் வேலைக்குப் போகலாம் அப்படிப் போனால் இவ் அகதி காசை நிறுத்தி விடுவார்கள்.

கடந்த மார்கழி மாதம் எனக்கு ஓர் கடிதம் வந்தது. அதில் 1992 இன் பின் சுவிஸ் வந்து அரசியல் தஞ்சம் கோரியவர்களுக்கு புகலிடம் அளிக்கப்படமாட்டாது எனவும், உடனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது, அதனை அடுத்து எனக்கு வழங்கப்பட்ட காசு நிறுத்தப்பட்டது.

அதனால் நான் எனது நண்பர்களின் உதவியுடன் சட்டத்தரணி ஒருவரின் உதவியை நாடினேன் அவர் சில மாதங்கள் தங்குவதற்கு அனுமதி பெற்றுத்தந்தார் இதன் படி கடந்த ஆவணி வரை தங்க முடிந்தது.

அதன்பின்பு மீண்டும் சுவிஸ் பொலிசாரிடமிருந்து கடிதம் வந்தது. நான் சட்டத்தரணியை அணுகியபோது 1995 சித்திரை வரை சுவிஸில் தங்குவதற்கு அனுமதி பெற்றுத் தந்தார். நான் வெளியில் ஓர் தொழிற்சாலையில் வேலை செய்யத் தொடங்கினேன். வெளிநாட்டவர்கள் மீன்தொழிற்சாலை, நூடில்ஸ் தொழிற்சாலை, ஹோட்டல்கள் மரக்காலைகள் போன்றவற்றில் வேலை செய்கிறார்கள். சுவிஸில் இலங்கையர்கள் மட்டும் ஒரு லட்சத்தி ஐம்பதினாயிரம் பேர் வரையில் இருப்பதாக அறிந்தேன். வேறுநாடுகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

அகதிகளை வெளியேற்றும் சுவிஸ் அரசின் முடிவுக்கு எதிராக இங்கு அகதிஅந்தஸ்து கோரியிருந்தவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதாக அறிந்தேன். ஆனால் அவர்களுடன் எனக்கு தொடர்புகள் இருக்கவில்லை

இலங்கையர்கள் அங்கு கொலைகள் கூட செய்துள்ளார்கள். நான்கு மாதங்களுக்கு முன்னரும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒருவர் கொலை செய்யப்பட்டார் அவர்பல வருடங்களாகசகலவசதிகளுடனும் 'தூண்' எனும் இடத்தில் வசித்து வந்தார். இவரிடம் 60 லட்சம் ரூபாவை சூதாட்டத்திற்கென யாழ்ப்பணத்து இளைஞர் ஒருவர் கடனாகப்பெற்றிருந்தார் இவர் அப்பணத்தை சூதாட்டத்தில் இழந்ததினால் கடனை திருப்பிக் கொடுக்க முடியவில்லை இதனால் பிரான்சிலிருந்து தனது இரு நண்பர்களை தொலைபேசி மூலம் அழைத்த இவர் குறிப்பிட்ட ஓர் இடத்திற்கு வரும்படி கடன்கொடுத்தவரையும் அழைத்து நண்பர்கள் மூலம் இவரை காருக்குள்ளேயே வைத்துசுட்டுக் கொலை செய்தனர். இக் கொலையைப் புரிந்து விட்டு இவர்கள் தப்பியோட முற்படுகையில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு தற்போது சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது இதுபோன்ற செயல்களால் வெளிநாட்டவர்களுக்கு அங்கு மதிப்பு குறைவாகவேயுள்ளது. இச் சம்பவம் அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

**உலக அரங்கிலே மனிதாபிமானம் மனித நேயம், மனித காருண்யம் பற்றி எல்லாம் போதித்து வரும் 'சுவிஸ்' தான்வழங்கிய வதிவிடகாலம் முடியு முன்னே சத்தம் சஞ்சடி இன்றி இரவோடு இரவாகக்க தவைத்தட்டி கையில் விலங்கிட்டு தேசத் துரோகம் இழைத்தவன் போன்றுநாட்டைவிட்டே வெளியேற்றியமை ஜீரணிக்கமுடியாத ஒன்றாகும்**

இதுபோன்ற பல்வேறு சம்பவங்களும் வேறுவேறு பகுதிகளில் நடந்ததாக கேள்விப்பட்டிருக்கிறேன் இத்தகைய சூழ்நிலைகளால் நான் எவருடனும் தொடர்புகளை கொண்டிருக்கவிரும்பவில்லை எனினும் எனக்கு சித்திரைவரை தங்கஅனுமதி கிடைத்தபின்பு நான் துணிந்து வீதிகளில் நடமாடினேன் வேலைக்குப் போய் வந்தேன் அங்கு எல்லோரும் அப்படித்தான் வேலை செய்கிறார்கள்

சம்பவதினம் அதிகாலை நான்தூக்கத்திலிருந்தவேளை யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. எழுந்து கதவைத்திறந்த போது இரு சுவிஸ் பொலிசார் நின்றனர் அவர்கள் என்னை பொலிஸ் நிலையம் வரும்படி அழைத்தனர் அப்போ என்னுடன் தங்கியிருந்த உறவினர் ஒருவர் எதற்காக அழைத்துச் செல்கிறீர்கள் எனக் கேட்டார் அதற்கு பொலிசார் இவர் மீது சிறுவிசாரணை உள்ளது. இருமணித்தியாலங்களுக்குள்திருப்பிக் கூட்டிவந்து விடுகிறோம் எனக் கூறிவிட்டு ஜிப்பில் ஏற்றி பொலிஸ் நிலையம் கூட்டிச் சென்றவர்கள் அங்கிருந்த இருட்டறைக்குள் என்னை விட்டுப் பூட்டிவிட்டனர். உணவு எதுவும் வழங்கப்படாத நிலையில் மாலை மூன்று மணிவரை அதற்குள் இருந்தேன். பின்பு அங்கிருந்து விசாரணைக்கென அழைத்து சென்று பெயர் மற்றும் வீட்டு விலாசத்தினை கேட்டு பதிந்து கொண்டதுடன் என்னைப் படம் பிடித்து கைவிரல் அடையாளத்தையும் எடுத்துக் கொண்டனர்.

அதன் பின் வேறோர் இடத்திற்கு கொண்டு சென்ற பொலிசார் அங்கிருந்த இருட்டறைக்குள் விட்டுப் பூட்டி விட்டனர். அன்று மாலை முதல் மறுநாள் மாலைவரையும் அந்த இருட்டறைக்குள்ளேயே காலம் கழிக்க வேண்டியதாயிற்று. அங்கிருந்தபோது பாணும் தேநீரும் தந்தார்கள மாலை நாலுமணியளவில் அவர்கள் என்னை வெளியே வர அனுமதித்தனர். இருட்டறையிலிருந்து வெளியே வந்த நான் அங்கிருந்த பெண்மணியிடம் ஏன் என்னை அடைத்து வைத்திருக்கிறீர்கள்? என்ன செய்தேன்? என ஆங்கிலத்தில் கேட்டேன். அதற்கு அவர் ஒரு பிரச்சினையும் இல்லை- எங்கள் அரச சட்டப்படி 1992 இன் பின் சுவிஸ் வந்தவர்கள் வெளியேற்றப்பட வேண்டும்- அதனை நாம் நடைமுறைப்படுத்துகிறோம் என்றார் நான் எனக்கு அடுத்த சித்திரைவரை தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறி அந்த அனுமதிக் கடிதத்தினைக் காண்பித்த போதிலும் அதனை ஏற்றுக் கொள்ள அவர் மறுத்து விட்டார்.

இறுதியாக ஒரு பேனா கூட எடுத்துவர அனுமதிக்கப்படாத நிலையில் உடுத்த உடுப்புடன் கைகளுக்கு விலங்கு மாட்டி ஜீப்பில் ஏற்றி ரயில் நிலையத்திற்கு கொண்டு வந்தனர். ரயிலில் தனியான ஒரு பெட்டிக்குள் என்னை விட்டு பூட்டிவிட்டு பொலிஸ்காரர் ஒருவர் காவல்காத்தார்.

ரயில்வந்து விமான நிலையத்தை அடைந்ததும் அதிலிருந்து இறக்கி விமான நிலையத்திற்குள் கொண்டுவந்துவிட்டனர். அங்குவைத்து என்னிடம் 300 பிராங் காசும் விமானரிக்கற்றும் தரப்பட்டது விமானத்தில் ஏறகூட்டிச் செல்லும் போதுதான் என் கைகளில் போடப்பட்டிருந்த விலங்குகள் கழற்றப்பட்டன. விமானத்தில் வந்து கட்டுநாயக்காவில் இறங்கும்போதேவிமான ஓட்டி ஒருவர் என் அருகில் வந்து கடவுச் சீட்டு ஒன்றை என்னிடம் நீட்டினார் அதை விரித்து பார்த்தபோது தான் இவர்கள் எனது புகைப்படத்தை ஒட்டி புதிய கடவுச்சீட்டும் தயாரித்திருந்தது தெரிந்தது.

கட்டுநாயக்காவில்நான் இறங்கியதும் சிங்களசுங்க திணைக்கள அதிகாரிகள் என்னை மிரட்டினர். அச்சமடைந்த நான் பொலிசார் தந்த பிராங்கை மாற்றி அவர்களுக்கு லஞ்சமாக கொடுத்து விட்டு ஒருவாறு தப்பி வெளியே வந்தேன்.

உலகில் மனித உரிமைகள் பற்றி பெரிதாக பேசிக் கொள்ளும் சுவிஸ் அரசு என்னுடன் இவ்வாறு நடந்து கொண்டதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. குழுவாக வெளியேற்றினால் எதிர்ப்புகள் தோன்றும் என்பதாலேயே இவ்வாறு தனித்தனியே பிடித்து வலுக்கட்டாயமாக மனிதாபிமானம் அற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

நுழைந்தேன். அங்கு உறவினர் ஒருவருடன் சில நாட்கள் தங்கியிருந்த பின் கடந்த வருடமுற்பகுதியில் அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்தேன்.

அதன்பின் ஒருசில மாதங்கள் தற்காலிக முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டேன் பின்பு ருதி (Ruthi) எனும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த ''Aufnahmentrum'' எனும் முகாமில் தங்க வைக்கப்பட்டேன். இந்த முகாமில் இறுதியாகஸ்ரட் (Staad) எனும் இடத்தில் உள்ள முகாமிற்கு மாற்றினார்கள். அங்கு எமக்கு சகல வசதிகளும் வழங்கப் பட்டதுடன் அகதிப்பணமாகபத்தாயிரம் ரூபா வரையில் தந்தார்கள் நாம் விரும்பினால் வேலைக்குப் போகலாம் அப்படிப் போனால் இவ் அகதி காசை நிறுத்தி விடுவார்கள்.

கடந்த மார்கழி மாதம் எனக்கு ஓர் கடிதம் வந்தது. அதில் 1992 இன் பின் சுவிஸ் கொலைகள் கூட செய்துள்ளார்கள். நான்கு மாதங்களுக்கு முன்னரும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒருவர் கொலை செய்யப்பட்டார் அவர்பல வருடங்களாகசகலவசதிகளுடனும் 'தூண்' எனும் இடத்தில் வசித்து வந்தார். இவரிடம் 60 லட்சம் ரூபாவை சூதாட்டத்திற்கென யாழ்ப்பணத்து இளைஞர் ஒருவர் கடனாகப்பெற்றிருந்தார் இவர் அப்பணத்தை சூதாட்டத்தில் இழந்ததினால் கடனை திருப்பட்டிருக்கிறேன் இத்தகைய சூழ்நிலைகளால் நான் எவருடனும் தொடர்புகளை கொண்டிருக்கவிரும்பவில்லை எனினும் எனக்கு சித்திரைவரை தங்கஅனுமதி கிடைத்தபின்பு நான் துணிந்து வீதிகளில் நடமாடினேன் வேலைக்குப் போய் வந்தேன் அங்கு எல்லோரும் அப்படித்தான் வேலை செய்கிறார்கள்

சம்பவதினம் அதிகாலை நான்தூக்கத்திலிருந்த வேளை யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. எழுந்து படம் பிடித்து கைவிரல் அடையாளத்தையும் எடுத்துக் கொண்டனர்.

அதன் பின் வேறோர் இடத்திற்கு கொண்டு சென்ற பொலிசார் அங்கிருந்த இருட்டறைக்குள் விட்டுப் பூட்டி விட்டனர். அன்று மாலை முதல் மறுநாள் மாலைவரையும் அந்த இருட்டறைக்குள்ளேயே காலம் கழிக்க வேண்டியதாயிற்று. அங்கிருந்தபோது பாணும் தேநீரும் தந்தார்கள மாலை நாலுமணியளவில் அவர்கள் என்னை வெளியே எடுத்துவர அனுமதிக்கப்படாத நிலையில் உடுத்த உடுப்புடன் கைகளுக்கு விலங்கு மாட்டி ஜீப்பில் ஏற்றி ரயில் நிலையத்திற்கு கொண்டு வந்தனர். ரயிலில் தனியான ஒரு பெட்டிக்குள் என்னை விட்டு பூட்டிவிட்டு பொலிஸ்காரர் ஒருவர் காவல்காத்தார்.

ரயில்வந்து விமான நிலையத்தை அடைந்ததும் அதிலிருந்து இறக்கி விமான நிலையத்திற்குள் கொண்டுவந்துவிட்டனர். அங்குவைத்து என்னிடம் 300 பிராங் காசும் விமான [illegible] தேன்.

உலகில் மனித உரிமைகள் பற்றி பெரிதாக பேசிக் கொள்ளும் சுவிஸ் அரசு என்னுடன் இவ்வாறு நடந்து கொண்டதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. குழுவாக வெளியேற்றினால் எதிர்ப்புகள் தோன்றும் என்பதாலேயே இவ்வாறு தனித்தனியே பிடித்து வலுக்கட்டாயமாக மனிதாபிமானம் அற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் இன்பக் கண்காட்சி ஒரு மனப் பதிவு...

கண்காட்சி என்பது கட்புலனூடாக மனதில் புதிய சிந்தனைகளை அலை அலையாக எழ வைப்பதுடன் புதியதொரு உணர்வையும் ஊட்டுவதாக உள்ளது. இதன் மூலம் எமது கடந்த காலம் அல்லது நிகழ்காலத்தின் புதிய பகுதி எம் முன் விரிய வைக்கப்படுகிறது.

யாழ் உள்ளூராட்சி திணைக்களம் ஒழுங்கு செய்திருந்த தமிழ் இன்பக் கண்காட்சி யாழ் இந்துக் கல்லூரியில் இம் மாதம் 15, 16, 17, 18 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இத்தினங்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4 30 மணி வரையும் பார்வையிடக் கூடியவகையில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

குமாரசாமி மண்டபத்தின் உள்ளே நுழைந்ததும் ஓவியங்கள், சிற்பங்கள் வரிசைப்படுத்தப்பட்ட பகுதி கண்களைக் கவர்ந்தன.

பல ஓவியங்கள் சமகாலத்தை யதார்த்தபூர்வமாகப் பதிவு செய்திருந்தன. இது பெரிய முயற்சி. அவலங்கள் அலையம்சமாக வரையப்பட்டிருந்தன.

ஓவியப் பயிற்சி பெற்று வரும் மாணவர்கள் பலர் தமது ஆற்றலை நன்குவெளிப்படுத்த இது ஏதுவாக அமைந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அடுத்த பகுதி ஆயுர்வேத சித்த மருத்துவத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்தது. மண்டபத்தின் மேல் பகுதியில் ஈழத்துச் சஞ்சிகைகள், நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. 93-94 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தவையாக இவை காணப்பட்டன. இதனால் நூல்களின் தொகை மிகக் குறைவாகவே காணப்பட்டது.

ஆயினும் சமீபகால எமது படைப்புகளை நாம் அடையாளம் காணக் கூடியதாக இருந்தது.

அடுத்த பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவின் நூல்கள், சஞ்சிகைகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன மிகவும் பயன்பாடானதாகஇவை காணப்பட்டன.

வேறொரு பகுதியில் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு வெளியீடுகள் வைக்கப்பட்டிருந்தன.

நாம் அறிந்திருந்ததும், அறிந்தும் தெரிந்து கொள்ளமுடியாமலிருந்த வெளிநாட்டுப் பிரசுரங்கள் எம்மை வசீகரித்தன.

**வவுனியா திலீபன்**

மேல் கட்டடத்தின் இன்னொரு பகுதியில் மார்க்கு, இராசையா, ஏ வீ. ஆனந்தன் ஆகியோரின் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இப்பகுதியில் ஆனந்தன் செதுக்கிய சிற்பங்கள் கண்களுக்கு விருந்தளித்தன. அச் செதுக்கல் கலை எம்மை பிரமிக்க வைத்தது.

வேறொரு பகுதியில் தமிழர் வாழ்வில் புராதன பொருள்கள் அடங்கிய பகுதி பல நூற்றாண்டு காலத்திற்கு எம்மை அழைத்துச் சென்றது

இந்துக் கல்லூரி கட்டடங்களை ஒட்டிய பகுதி ஒன்றில் குரும்பசிட்டி இரா கனகரத்தினத்தின் உலகத் தமிழர் ஆவணக் காப்பகம் எம்மை அழைத்தது தமிழரின் கலை கலாசாரம் மொழி இலக்கியம் ஆகியவற்றின திரட்டல் இதில் அடங்கியிருந்தது.

கண்காட்சியைப் பார்வையிட வந்தோரை பெரிதும் கவர்ந்த பகுதி 'விடுதலைப் புலிகளின் புகைப்படப் பதிவுகள்' என்றே சொல்ல வேண்டும் முண்டியடித்துக் கொண்டு பெரியோர், சிறியோர் மாணவர்கள் என்று அனைவரும் இதை மிக ஆழமாகப் பார்வையிட்டனர்.

சிங்கள பேரினவாத அரசின் அடக்குமுறைகளும் தமிழர் மீதான கொடுமைகளும் விடுதலைப் புலிகளின் போராட்ட வளர்ச்சியும் இங்கு புகைப்படங்களாக காணப்பட்டன.

இந்திய இராணுவத்தின் கபடத்தனமும் இந்த இராணுவத்தின் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும், கரும்புலிகள் கடற்புலிகள் என விடுதலைப் புலிகளின் படிமுறை வளர்ச்சியும் புகைப்படங்களில் தெளிவாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

தமிழீழ காவல்துறை, தமிழீழ வைப்பகம், தமிழீழ நீதிமன்றம் ஆகிய விடுதலைப் புலிகளின் நிர்வாகக்கட்டமைப்புகள் பற்றி பதிவுகளும் இடம் பெற்றிருந்தன.

எமது வரலாறு, கலை, கலாசாரம் பண்பாடு ஆகியவற்றின் வெளிப்பாடாக இக் கண்காட்சி அமைந்திருந்தது

பெரியளவில் கண்காட்சி ஒன்றை நடத்துவதற்குரிய மண்டபம் இல்லை என்பதனால் ஏற்பட்ட இடப்பற்றாக்குறையை இங்கு காணமுடிந்தது.

இந்த தமிழ் இன்பக் கண்காட்சியின் பின்னால் உள்ள உழைப்புப் பெரிது காலத்திற்கு ஏற்றதொரு காரியத்தை செய்து முடித்தமைக்காக விழாக்குழுவினர் பெருமைப் படலாம்.

# யாழ்ப்பாணத்தில் செப்ரிசீமியா மரணங்கள்

யாழ்ப்பாணத்தில் செப்ரிசீமியாவினால் பலர் மரணிப்பதாக ஈழ நாளேடுகள் பல தடவைகள் செய்தி பரப்பின. இது பலருக்கு மனவேதனையைத் தந்தது. இதற்கான காரணத்தை அறிய இக்கட்டுரையாளருக்கும் அவர் போன்றோருக்கும் மனந் துடித்தது. இவற்றை ஆய்வதற்கு அரியதோர் சந்தர்ப்பமாக இக் கட்டுரையாளரின் யாழ் மருத்துவபீட பரீட்சைகளை ஒட்டிய வருகை அமைந்தது.

இவ் வருகையின் போது யாழ் மருத்துவர்களுடன் உரையாடிய போது அவர்களும் பலர் செப்ரிசீமியா மரணங்கள் நிலவுவதை எடுத்துரைத்தனர். இம் மருத்துவர் கூற்றின் படி நெருப்புக்காய்ச்சல் குணத்துடன் நிலவும் நோய் நிலவுவதாகவும். நெருப்புக் காய்ச்சலுக்காகப் பாவிக்கப்படும் அம்பிசிலின் Ampicillin குளோறம் பினிக்கோல் (Chloramphenicol) ஆகிய நுண்ணுயிர்க் கொல்லிகளினால் இந் நோய் குணமாவதில்லை என்ற கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இத்துடன் மலேரியா நோய் பரவுவதாகவும், சிலவேளைகளில் மலேரியா நோயுடன் நெருப்புக்காய்ச்சல் இணைப்பும் பலநோயாளிகளிடம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செப்ரிசீமியா என்று கூறும் போது அது நோய்க் குணங்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஒரு முடிவே. செப்ரிசீமியாவிற்கு பல நுண்உயிரினங்கள் காரணியாக அமைகின்றன. இக்காரணிகள் யாவை என இனங்கண்டு சிகிச்சை முறையையாள்வதே விஞ்ஞானரீதியாக ஏற்றுக் கொள்ளப்படத்தக்கது. ஆய்வு கூட உதவியின்றி இம்முறை இங்கு கையாள முடியாநிலை இருந்தது. செப்ரிசீமியாக் குணங்கள் குலைப்பன் காய்ச்சல் நடுக்கம் உடல் இயக்க அதிர்வு (Shock) தேகமெங்கும் முறிவுற்றது போன்ற உணர்வு தடுமாற்ற மனப்பான்மை ஆகியன.

மேற்குறிப்பிட்ட குணங்களை தருவன, வைரசுகள் பட்டீரியங்கள், பங்கசுக்கள், புறட்டசோவாக்கள் ஆகியவற்றுடன் இவற்றால் வெளிபேற்றப்படும் தொட்சின்கள் ஆகிய நச்சுப் பொருட்களுமாகும். இனங் காணப்படா செப்ரிசீமியாக்கள் அவற்றிற்கென இனங்காணப்படா நுண்ணுயிர் கொல்லிகளினாற் சிகிச்சை பெற இவற்றிற்கு ஆகவேண்டிய ஆய்வுகூட வசதிகள், தகுந்த நிபுணத்துவமும் அனுபவமின்மை ஆகியன யாழ்ப்பாணத்தில் அமையாமை வருத்தத்திற்குரியனவாகும்.

இருந்தும் யாழ் மருத்துவ பீடத்தில் உள்ள வசதிகளைப் பயன்படுத்தி இக்கட்டுரையாளர் ஆய்வுகளை மேற்கொண்டார். இதன் பயனாகச் சில மருத்துவ துப்புகள் துலங்கின

செப்ரிசீமியா என மருத்துவர்களால் கொள்ளப்பட்ட நோயாளரின் இரத்தம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. யாழ் மருத்துவ பீட நுண் உயிரியல் ஆய்வு கூடத்தில் இவ் ஆய்வு நடத்தப்பட்டது. நுண் உயிர் வளர்ச்சி ஊடகங்களில் இரத்தத்துள் நுண் உயிர்கள் இருப்பின் அவற்றினை வளர்க்கும் முகமாக ஊடகங்களுக்குள் இரத்தம் செலுத்தப்பட்டது. பின்னர் அவற்றினின்று பெறப்படும் நுண் உயிரினம். நுண் உயிரிக் கொல்லித்தட்டுகள் (Antibiotic Sensitivity Discs) பாவித்து எவ்வெவ் பட்டீரியங்கள் எவ்வகையான நுண்ணுயிர்க் கொல்லிகளினால் அழிக்கப்படுவன என்றுவகை காணப்பட்டன.

இம்முறையினால் செப்ரிசீமியாக்கள் இருவகையாக அமைந்துள்ளமை காணப்பட்டது. முதலாம் வகையின பெரும்பாலும் சிறு பிள்ளைகளிடத்துக் காணப்பட்டது. இக்கிருமிகள் ஸ்டபிலோக் கோக்கசு (Staph albus) அலுபசு, மைக்குறோ கோக்கசு (Micrococeus) ஆகும். இவை எக்காலத்திலும் சாதாரண உடல் நலமுறையோரைத்தாக்குவதில்லை. உடல் நலக்குறை போஷாக்கின்மை கிருமி எதிர்ப்புச் சக்தியின்மை உடையோர் ஆகியயவரே இக்கிருமிகளாற் தாக்கப்படுவர். இந்நோயாளரைச் சிறுவர் வார்ட்டில் பார்வையிட்டபோது இவர்கள் போஷாக்கின்மையோராய் தேக மெலிவு உடையோராய் காணப்பட்டனர். இவர்களின் கண்கள் குழிகளுட் புகுந்திருந்தன. நெஞ்சில் எலும்புக் கூடு துலங்கி இருந்தது, வயிறு மட்டும் பானைவயிறாய்உடம்பிலுள்ள ஏனைய பகுதிகளை விடப் பெரியனவாய் இருந்தன கால்கள் சோர்ந்து இருந்தன இவ்வாட்டில் அனுமதி பெறும் சிறார்களுள் 50 % த்தினர் இவ்வாறானவர்களே எனச் சிறுவர் வைத்திய நிபுணர் தெரியத்தந்தார். இச் சிறாரைத் தாக்கும் இந்நோய்க்கு உகந்த நுண் உயிர் கொல்லிகள் சாதாரண நோய்க்குப் பாவிப்பனவற்றுக்கு வேறானவை ஆக ஆய்வுகள் துலக்கின இவை, கிலின்டாமைசின் (Clindamycin) நோரீபுளொக்சசின் (Norfloxacin) சிப்புறோபுளொக்சசின் (Ciprofloxacin ஆகியன என ஆய்வுகள் தெரியத்தந்தன. 1973, 1974 ஆகிய காலங்களில் இலங்கை முழுவதிலும் போஷாக்கின்மையே மரணத்திற்கு முதற் காரணமாய் அமைந்திருந்தது. அவ் வேளையிலும் யாழ் மக்கள் பாதிப்புட்பெறவில்லை. இதன் காரணம் உணவுத்தட்டுப்பாடு இங்கு நிலவாது தம் சுமத் தொழில் விருத்தியால் தன்நிறைவு இருந்தமையே, இப்பொழுதோ, உரமின்மை மின்சாரமின்மை, எரிபொருளின்மை இவற்றை ஒட்டிய நீர்பாசன வசதியின்மை ஆகியன நிலவுவது காணப்படுகின்றது. இந்நோய்க்கு சிகிச்சையிற் தங்காது வருமுன்னர் காப்பதே மேலானது எனவே உணவுப்பொருள் உற்பத்தியிற் கவனஞ் செலுத்துவது சகலரதும் பொறுப்பாய் அமைகின்றது.

அடுத்து இரண்டாம் ரகமானசெப்ரிசீமியாவை நோக்குவோம். இது சகலவயதினரிடையேயும் தோன்றுகிறது ஆரம்பகுணம்நெருப்புக்காய்ச்சல்போலோ மலேரியாபோலோதோன்றுகின்றது ஆய்வு பரிசோதனையின் போது இரத்தமூலம் பெற்ற நுண் உயிர்களுட் பெரும்பான்மையானவை சல்மனெல்டா டைபி

(2 ஆம் பக்கம் பார்க்க)

**டாக்டர் க. வேலாயுதபிள்ளை**
இடைவருகை விரிவுரையாளர்,
யாழ் மருத்துவபீடம்

# இது ஒரு பொன்னான வாய்ப்பு!

## தீபாவளி திருநாளை முன்னிட்டு, எமது விற்பனையில் விசேட சலுகை

எம்மிடம் இருப்பதாக நீங்கள் அறிந்தவை!

**கண்களைக் கவர்ந்திடும்**

- ★ இமிடேசன் கோல்ட் கவறிங் நகைகள்
- ★ மணப்பெண்களின் சோடனை நகைகள்
- ★ வெளிநாட்டு அழகுசாதனப் பொருட்கள்

**ஆவலைத் தூண்டிவிடும்**

- ★ சிறுவர் விளையாட்டுப் பொருட்கள்
- ★ பூச்சாடிகள் மேசை விரிப்புக்கள், எவர் சில்வர் பாத்திரங்கள்

இவற்றுடன் தையல் தேவைகளுக்குரிய லேஸ் நூல் வகைகள்
இவற்றினைவிட, நாம் உங்கள தேவைகளுக்காக மேலும் இங்கு தருவித்தவை!

**ஒயிலும் செயல்திறனும் அற்புதமாக இணைந்த**

- ★ றேடியோ வகைகள்
- ★ கல்குலேட்டர்கள்

**கடிகாரத்துறையிலே இன்றைய தொழில் நுட்பத்துடனான**

- ★ புதிய வகை கைக்கடிகாரங்கள்
- ★ சுவர் மணிக்கூடுகள்

இவற்றினை விட,

- ★ நைலோன் கயிறுகள்
- ★ பொலித்தீன் வகைகள்
- ★ பையைக்குரிய கோப் வகைகள்
- ★ பல்வர்ண நிறங்களிலான குடைகள்
- ★ பிளாஸ்ரிக் வகைகள்

கற்பனையில் கண்ட இல்லம் கண்ணெதிரே உருவாக
இவையாவும் உங்களுக்கு நிச்சயம் தேவை
கவலை வேண்டாம!
எல்லாமே இன்னும் முடிந்து விட வில்லை!!
இவற்றைப் பெற்றிட இன்றே விரைந்திடுங்கள்

# [] ஜெயா அழகு மடம் []

சில்லறை வியாபாரம்:- 177-A இராசன் வீதி, (மின்சார நிலைய வீதி) யாழ்ப்பாணம்.

மொத்த வியாபாரம்:- 187, இராசன் வீதி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மங்கையரே எம்மிடம் தலை நகை வாடகைக்கு உண்டு

(சி-10543)



# திருமாட்டி

(சீமாட்டி)

தீபாவளியை முன்னிட்டு

மகோன்னத மலிவு விற்பனை!


## செய்தியாளர்களின்

வினரை சந்தித்து கிடைத்த தகவல்களை திரட்டிக்கொண்டு அவசரஅவசரமாக கொழும்பு நோக்கி புறப்பட்ட ''ராய்ட்டர்'' செய்திஸ்தாபன செய்தியாளர்வர்ணகருணாதிலக சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ந்துவிட்ட சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இப்பேச்சு வார்த்தை குறித்த தொடக்க நிலையை உலகிற்கு முதலில் தெரிவிக்கும் நோக்குடனேயே கொழும்பு திரும்புகிறோம். பேச்சுக்களின் பின் பகுதியை திரட்டும் நோக்குடன் எமது நிறுவன சக செய்தியாளரான செல்வி நிலோனா டி சில்வா தங்கியுள்ளார்' எனவும் தெரிவித்தார்.

இதேவேளை பேச்சுவார்த்தை தொடர்பான சகல விபரங்களையும் திரட்டிச் செல்லும் நோக்குடன் தங்கி நின்ற பத்திரிகையாளர்களில் ஒருவரான வீரகேசரி பத்திரிகைச் செய்தியாளரும் தமிழருமான செல்வராசா எதுவித கருத்துக்களையும் கூறமறுத்துவிட்ட நிலையில் 'கவுண்ட பொயின்ட்' கட்டுரை ஆசிரியரான அசங்க ரட்ணமாலா ''தமிழ் மக்கள் உணவுக்காகவோ ஆடம்பர வாழ்விற்காகவோ இரத்தம் சிந்திப்போராடவில்லை அவர்கள் காலம் காலமாக தாம் இழந்துவிட்ட உரிமைகளை பெற்றுக்கொள்ளவே இங்கு போராடிக்கொண்டிருக்கிறார்கள். அத்தகையோருக்கு அரசு ஆனைப்பசிக்கு சோழப் பொரியைக்காட்டுவது போல் காட்டுகிறது. இவ்வாறு தமிழரை தொடர்ந்தும் அற்ப சலுகைகளைக் காட்டி ஏமாற்ற அரசு நினைப்பது வேடிக்கையானது இத்தகைய நிலையில் அரசு நினைப்பது போல எதுவித தீர்வும் கிடைக்கப்போவதில்லை. மாறாக தமிழரின் போராட்டத்திற்கான மையப் பொருளைக் கண்டறிந்து அதற்குரிய பரிகாரத்தைக்காண அரசுதன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அப்படியான ஓர் மனநிலையில் அரசு இருந்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைகக முடியும்'' என்றார்.

'ஹரய' சிங்கள வார இதழின் செய்தியாளரான நிஷந்த அல்விஸ் ''இரு இனங்களுக்கு இடையிலேயே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதக எண்ணியிருந்த எனக்கு இங்கு வந்து பார்த்ததன் பின்பு தான் புரிந்தது இந்த யுத்தம் இரு நாடுகளுக்கிடையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று சிறிலங்கா

தெளிவினை ஏற்படுத்தவேண்டியது எம் போன்ற சிறிய பத்திரிகைகளின் முக்கிய பணிகளில் ஒன்றாக அமைய வேண்டும். அப்படியான ஓர் தெளிவினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலமே இப்பிரச்சினைக்கு ஓர் தீர்வை எட்ட முடியும்'' என்றார்'கினியித' வாரஇதழ் செய்தியாளர் ரணசிங்க

பேச்சு வார்த்தைகள் எப்பவும் சுமுகமாகவே நடைபெறும். தீர்வென்ற ஒன்று வந்து அதற்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் போதே பிணக்குகள் தோன்றுகின்றன இந்நிலைக்கு அடிப்படை, அரசியல் லாபமே.

விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினரை முகாம்களை விட்டு வெளியேற விடாது தடுத்து வைத்துள்ளனர், அவ்வாறு தடுத்து வைத்திருக்காது நடமாட அனுமதித்திருப்பின் இன்று கிழக்கில் மனித எலும்புக்கூடுகள் தோண்டப்படுவது போல் இங்கும் எலும்புக் கூடுகளை மனித புதைகுழிகளில் இருந்து தோண்டி எடுக்கும் நிலை உருவாகியிருக்கும் கிழக்கு புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இல்லாதிருப்பதால் நாளடைவில் அங்கும் மனித புதை குழிகள் தோண்டப்பட்டு காணாமல் போனவர்கள் எலும்புக்கூடுகளாக அதிலிருந்து மீட்கப்படலாம் என எண்ணுகிறேன். வடக்கில் இந்நிலைதோன்றாததை இட்டு விடுதலைப்புலிகளுக்கு மக்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்கிறார் சுதந்திரபத்திரிகையாளர் சங்க உபதலைவரும் 'ராவய' பத்திரிகை சட்டுரை ஆசிரியருமான நந்தன வீரரட்ண.

## சுவிஸ்

முறையில் வெளியேற்ற முற்பட்டுள்ளது.

1983ற்கு முற்பட்ட காலத்தில் சுவிஸ் சென்றவர்களுக்கு மட்டுமே நிரந்தர வதிவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது 1992இன்பின் சென்றவர்கள் விரைவில் அங்கிருந்து வெளியேற்றப்படுவர் என நான்உறுதியாக நம்புகிறேன்.

# நீங்காத நினைவின் ஏழாம் ஆண்டு



## குருசுமுத்து யோண் பீற்றர்

(சில்றன்)

(யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்)

| மண்ணில் பிறப்பு | விண்ணில் நுழைவு |
|---|---|
| 1964-03-15 | 1987-10-27 |


ஆண்டு ஏழு சென்றதையா எங்கள் செல்வா
ஆனாலும் உம்மை எந்நாளும் மறவோம் சில்றா
கடமையை காலனாய் கூட்டிச் சென்றாய்
கண்ணிலே நீர் சுரக்கக் காத்திருந்தோம்.
பாரதத்தின் பாதகரால் மாண்டாய் என்ற
பாழ் செய்தி கேட்டு புழுவாய்த் துடித்தோம்
உடலிலே உயிர், உள்ளம் மட்டும்
எந்நேரமும் வேதனை மைந்தா
உம்மை நாங்கள் ஒரு போதும் மறவோம் ஐயா.

இறைவன் உங்களுக்கு நல்ல அருளை வழங்குவார் என வேண்டி இறைஞ்சுகின்றோம்.

உயரப்புலம்
ஆனைக்கோட்டை.

பெற்றோர், உறவினர்
(9726)

# 3 ஆம் ஆண்டு நினைவாக



(மின்சார நிலைய வீதி.)
யாழ்ப்பாணம்.

மொத்த வியாபாரம்:- 187, இராசன் வீதி,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: மங்கையரே எம்மிடம் தலை நகை வாடகைக்கு உண்டு

(சி-10543)


# திருமாட்டி

(சீமாட்டி)

தீபாவளியை முன்னிட்டு

**மகோன்னத மலிவு விற்பனை!**

யப்பான், இந்திய பட்டு, பருத்திச் சேலைகள், சைனா சீத்தை,

மற்றும் அனைத்து இறக்குமதி செய்யப்பட்ட புடைவைத் தினுசுகளும்
மலிவு விலையில்

உள்நாட்டு சீத்தை பப்ளின், J. B. சாறி வகைகளும்
மலிவு விலையில்!

இன்றே நாடுங்கள்

# திருமாட்டி

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

(10544)

பரிகாரத்தைக்காண அரசு தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அப்படியான ஓர் மனநிலையில் அரசு இருந்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைகக முடியும்'' என்றார்.

'ஹரய' சிங்கள வார இதழின் செய்தியாளரான நிஷாந்த அல்விஸ் ''இரு இனங்களுக்கு இடையிலேயே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக எண்ணியிருந்த எனக்கு இங்கு வந்து பார்த்ததன் பின்பு தான் புரிந்தது இந்த யுத்தம் இரு நாடுகளுக்கிடையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று சிறிலங்கா அரசின் கட்டுப்பாடுகளில் இருந்து முற்றிலும் விடுபட்டு தனி நாடு போன்று தமக்கென படைகளையும் தனியான நீதி, நிர்வாக அமைப்புக்களையும் கொண்டிருப்பதை கண்டு உண்மையிலேயே வியப்புற்றேன் என்றார்.

தென்னிலங்கைவாழ் சிங்கள மக்கள் தமிழர் போராட்டத்தின் உள்நோக்கினை தெளிவாக புரிந்து கொள்ளவில்லை. தென்னிலங்கையின் நாளாந்தப் பத்திரிகைகள் வியாபார நோக்கில் செயற்படுவதனால் இப்போராட்டத்தின் உண்மை நிலையை சிங்களமக்களுக்கு வெளிப்படுத்தத் தவறிவிட்டன இத்தகைய தவறினை திருத்தி இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'யுத்தம்' தொடர்பான


## சுவிஸ்

முறையில் வெளியேற்ற முற்பட்டுள்ளது.

1983ற்கு முற்பட்ட காலத்தில் சுவிஸ் சென்றவர்களுக்கு மட்டுமே நிரந்தர வதிவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது 1992இன்பின் சென்றவர்கள் விரைவில் அங்கிருந்து வெளியேற்றப்படுவர் என நான்உறுதியாக நம்புகிறேன்.

என்னை இலங்கைக்கு திருப்பி அனுப்பியது எனது முகாமில் என்னுடன் இருந்தவர்களுக்கே தெரியாது. நான் கொழும்பு வந்து சேர்ந்ததும் அவர்களுக்கு தொலைபேசி மூலம்தகவல்கொடுத்தபோது அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இரண்டாம் உலகயுத்தத்தை அடுத்து அடைக்கல நாடுகளாகத் தங்களைப்பதிவு செய்து கொண்ட நாடுகளில் முன்னணி வகிக்கும் சுவிஸ், தான் வழங்கியஅகதிஅந்தஸ்து காலம் முடியு முன்னரே தனது பொலிசாரைக் கொண்டு மிருகத்தனமாக வெளியேற்றிய செயலானது உலக அரங்கில் அதன் கபட நாடகத்தை அம்பலப்படுத்தும் என்றார் வேதனையுடன்.



பிறப்பு : 07. 04. 1972

வீரச்சாவு: 21. 10. 1991

**லெப்டினன்ட் பேபி**

(கந்தையா பஞ்சலிங்கம்)

களபூமி, காரைநகர்

தாயக பூமி சுதந்திரம் பெற்றிட
வேங்கையாகி வெங்களங்கள் பாய்ந்து
ஓங்கிய புகழுடன் வெற்றிகள் தாங்கி
வரலாறான வீர மகனே லிங்கா
என்றும் நீ எங்கள் இதய லிங்கம்
ஓம் சாந்தி

கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை

குடும்பத்தினர்

(9737)


மக்களின் மகிழ்ச்சிக்கு **சேரனின்** சிறப்புச் செய்தி!!

# ★ எழினி புடவை வாணிபம் ★

வழங்கும் **மலிவு விற்பனை** தவறவிடாதீர்கள்

**வடமராட்சியில்:**
சிவன் கோவில் மண்டபம்,
பருத்தித்துறை.
20, 21, 22ஆம் திகதிகளில் மட்டும்!

**யாழ்ப்பாணத்தில்:**
சேரன் பணிமனை மண்டபம்,
கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.
25, 26, 27ஆம் திகதிகளில் மட்டும்!

(சி-10546)

# பிரதமர் சந்திரிகாவின் இராணுவத்திற்கெதிரான குரல்; சமாதானம் மீதான விருப்பா? இயலாமையின் வெளிப்பாடா?

"முன்னைய அரசாங்கம், இராணுவத்தினரின் மீது போதிய கட்டுப்பாடு வைத்திருக்கவில்லை என நான் கருதுகிறேன்- இராணுவத்தினரிலும் சமாதானத்தைவிட போரை விரும்பக்கூடியவர்களும் இருக்கின்றனர் என்பது உங்களுக்குத் தெரியும். இவர்கள் கொழும்பில் உயர்மட்டத்தில் உள்ளவர்கள்- முகாம்களில் உள்ள இராணுவத்தினர் அல்ல. அவர்கள் சரியென நினைப்பதை செய்ய நாம் இடமளிக்க மாட்டோம்"

★ ★ ★

இராணுவம் கடந்த வருடங்களாகத் தமது மேலாதிக்கத்தைப் பேணி வந்துள்ளது- அவர்கள் தமக்குத்தாமே அரசாங்கமாக இருந்து வந்துள்ளனர்- நாம் இராணுவ உயர் அதிகாரிகளுடன் கதைத்த போது அவர்கள் அனுமதியின்றி எதையும் தீர்மானிக்கக் கூடாது என அவர்கள் கருதுவதை உணர முடிந்தது- இதற்கு எமது அரசாங்கம் எந்த வகையிலும் இடம்கொடுக்க விரும்பவில்லை எனவே அவர்களுக்குக் கூடிய அதிகாரம் இருந்துள்ளது- இதைக் கொண்டு சிலர் சமாதான முயற்சிகளை சீர்குலைக்க முயற்சி செய்யலாம்"

★ ★ ★

"பாதுகாப்புப் படையினர் அனாவசியமான விதத்தில் அரசியல்வாதிகளுக்கு உதவியாகச் செயற்பட்டிருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்"

"இதில் இராணுவத்தினரைப்பகைக்கும் அபாயம் உண்டு- எனினும் சிறந்த அரசாட்சியும் இருக்க வேண்டுமாயின் இடர்பாடுகளை எதிர்நோக்கவே வேண்டும்"

★ ★ ★

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா இராணுவத்தினர் மீது சுமத்திய இக்குற்றச்சாட்டுகள் ஜனநாயக மீட்சிக்காகவும், சமாதானத்திற்காகவும் அவர் எழுப்பியகுரலா? அன்றி இயலாமையால் ஏற்பட்ட ஆத்திரத்தின் வெளிப்பாடா இதில் எதுவாக இருப்பினும் இது சிறிலங்கா இராணுவ வட்டாரங்களிலும் குறிப்பாக ஆயுதப்படைகளின் தலைமைப் பீடத்தில் பெரும் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தி இருப்பது ஆச்சரியமானதொன்றல்ல.

எதிர்பாராத வேளையில் சிறிலங்காவின் முன்னைய ஆட்சித் தலைவர்கள் யாவரும் விமரிசிக்க அஞ்சிய ஒரு விடயத்தை சந்திரிகா குமாரதுங்கா விமரிசித்துள்ளமையானது அவரின் விவேகத்தைக் காட்டுகின்றது என்பதைவிட, அவரது ஆத்திரத்தை வெளிக்காட்டுவதாகவே கருத இடமுண்டு.

ஆனால் சிறிலங்காவில் இவ்வாறானதொரு அரசியற் சூழ்நிலை / முரண்பாடு உருவாவது தவிர்க்க முடியாததே. 'ஜனநாயக நாடு' ஒன்றில் இராணுவம் மேலாதிக்கம் பெற்றுவிட்ட சூழ்நிலையில் இவ்வாறான நிலை உருவானதற்கு உலகில் பல உதாரணங்களும் உண்டு. இவ்வாறானதொரு நிகழ்வின் உச்சக்கட்ட நிகழ்வே பாகிஸ்தானில் சுல்பிகார் அலிபூட்டோ. அதாவது இன்றைய பாகிஸ்தான் பிரதம மந்திரி பெனாசீர் பூட்டோவின் தந்தையார் இராணுவ அரசால் தூக்கிலிடப்பட்டமையாகும்.

ஆனால் இது ஒரு எதிர்பார்க்கப்பட்ட விடயம் தான். பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றால் அரசாங்கத்திற்கும்- ஜனாதிபதிக்கும் - இராணுவத் தரப்பிற்கும் இடையிலான முரண்பாடுகள் தவிர்க்க முடியாமல் எழுந்தே ஆகும் என்று அரசியல் விமர்சகர்கள் அன்று தெரிவி

அதிகாரங்களும், பாதுகாப்பு அமைச்சு தொடர்பான விவகாரங்களும் தன்னை மீறிச் செல்ல முடியாது என்ற நிலைப்பாடும் காரணமாக இருக்கலாம்.

இதில் எதுவாக இருப்பினும் அரசியற்தளம் பலவீனப்பட்டுப் போயுள்ள அவருக்குப் பின் புலம் பலமாகவில்லை அவரின் பின்னால் சில பத்திரிகைகள் கூட நிற்கத் தயாராக இல்லை. இந்நிலையில் அதிகாரம் இருந்தும் ஒரு மூலையில் அவர் ஒதுங்க வேண்டி நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்பதே யதார்த்தமாயுள்ளது

ஆனால் இராணுவத்தரப்பின் நிலை அவ்வாறில்லை இராணுவம் அரசியலில் பெரும் சக்தியாக வளர்ந்துள்ள அதேவேளை பலமானதொரு நிலையிலும் உள்ளது. பௌத்த பேரினவாதிகள், பேரினவாதப் பத்திரிகைகள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்கா போன்றோரின் பக்கபலமும் அதற்கு உள்ளது.

இந்நிலையில் தான் பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றிபெற்றதும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா ஒதுங்கிக் கொண்டது போல் இராணுவம் ஒதுங்கிக் கொள்ளவில்லை; ஒதுங்கிக் கொள்ளவும் மாட்டாது, ஏனெனில் அரசியற்தளம் போன்று இல்லாது இராணுவத் தலைமையானது ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் அமைப்பினைக் கொண்டதாகும்.

இதேசமயம் பொதுஜன ஐக்கிய முன்னணிதேர்தலில் வெற்றி பெற்ற போது இராணுவம் வழமை போலவே தனது விசுவாசத்தை புதிய அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொண்டதாயினும் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்குப் பெரிய ஆதரவை வழங்கியதென்று கூற முடியாது மறுவளமாகக் கூறுவதானால், இராணுவம் தனது நிலைப்பாட்டில் இருந்து சிறிதளவு விட்டுக் கொடுக்கவோ அன்றி இறங்கி வரவோ தயாராக இருக்கவில்லை; பொ. ஐ. முன்னணியின் கொள்கை குறித்து அது அலட்டிக் கொள்ளவில்லை.

பொ ஐ மு. அரசாங்கத்திற்கும்- இராணுவத்திற்கும் இடையிலான உறவு ஆரம்பம் முதலே கசந்து போனதற்கு இருவிடயங்களில் புதிய அரசாங்கத்தின் கொள்கையும், அறிவிப்புகளே காரணம் எனலாம். அதாவது இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு என்பதும், தென்னிலங்கையில் கடந்தகால அரசாங்கம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைப் படுகொலை செய்து புதைத்த குழிகளைத் தோண்டுவதுமாகும். அதாவது வடக்கு- கிழக்கில் யுத்தத்தை நிறுத்துவதும், தென்னிலங்கையில் புதைகுழிகளைத் தோண்டும் நடவடிக்கையும் ஆகும்.

இவ்விரண்டு விடயங்களும் ஐ தே கட்சித் தலைமைக்கு எப்படிச் சங்கடமானதோ, அதே போன்றே இராணுவத் தலைமைக்கும் சங்கடமானதாகும். ஒரு புறம், இராணுவம் அனுபவித்து வரும் பெரும் சலுகைகளை இழப்பதோடு, போரில் தோல்வியை ஒப்புக் கொண்டதாகமுடியும், அடுத்ததாக, தோண்டப்படும் புதை குழிகளில் இருந்து வரும் உண்மைகளில் இருந்து பல இராணுவ அதிகாரிகள் பாதிக்கப்பட வேண்டி வரலாம். பலர் சிறை கூடச் செல்ல வேண்டியும் ஏற்படலாம்;

இந்நிலையில் தான், இராணுவம் ஆரம்பம் முதலே தனது பிடிகளைத் தளர்த்த விரும்பவில்லை. தளர்

அரசாங்க காலத்தில் இடம்பெற்ற அதிகார துஷ்பிரயோகம் மற்றும் மோசடிகள் குறித்து அம்பலப்படுத்துவதே ஆகும். இந்த வகையிலேயே புதைகுழி விவகாரங்களும் மோசடிகளும் வெளிக்கொண்டு வரப்படுகின்றன. இதன் மூலம் சிங்கள மக்களிடம் இருந்து பெருந்தொகை வாக்குகளைப் பெற்றுக் கொள்வதே நோக்கமாகும்-

இதே சமயம் இனப் பிரச்சினை விவகாரத்திலும், சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமான பாதையில் செல்கின்றது என்பதை நிரூபிப்பதன் மூலம் சிறுபான்மையினரிடம்இருந்தும் வடக்கில் தேர்தல் நடத்த முடியாது போனாலும் தெற்கிலுள்ளவர்களிடமிருந்தாவது - வாக்குகளை திரட்டிக் கொள்வது நோக்கமாகும்; இதற்கேற்றால் போலவே சமாதான முயற்சிகளின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் ஒரு சிலவற்றையாவது மேற்கொள்ள அரசாங்கம் எண்ணியது. இதன் ஒரு அம்சமே பூநகரி- சங்குப்பிட்டிப் பாதை திறப்பது தொடர்பாகவும் அரசாங்கம் சிந்தித்ததெனலாம்.

ஆனால் இராணுவத் தரப்பு இதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை பூநகரிப் பாதை திறப்பதென்பது யாழ் குடா மீதான இராணுவத்தின் மூலதந்திரோபாயத்தை மாற்றுவதற்கு ஒப்பானதாகும் என இராணுவ தரப்பு வாதிட முடியுமாயினும் இராணுவம் தெற்கில் எழுந்துள்ள அபகீர்த்திக்கு எதிராக, அங்கு எதையும் செய்ய முடியாத நிலையில், வடக்கில் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போட முற்படுகிறது என்பதே உண்மையாகும்.

இதே சமயம் பொ. ஐ.முன்னணி அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்தில் இருந்தே இராணுவத்தரப்புடன் ஓரளவேனும்நெருக்கமான உறவைப்பேண முற்பட்டது. இதில் பிரதானபாத்திரத்தை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் அநுருத்தரத்வத்த வகித்தார். அவர் அரசாங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்று இரு வாரகாலத்திற்குள் வடக்கு- கிழக்கு பகுதியில் இருந்த பெருமளவிலான இராணுவ முகாம்களுக்கும் விஜயம் செய்திருந்தார். படையினருடன் நேரடியாகவும் உரையாடியிருந்தார்.

ஆனால், இராணுவத்தரப்பு இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்விற்கு ஒத்துழைப்பதாகக் கூறியதே ஒழிய எதுவித விட்டுக்கொடுப்பிற்கும் அது தயாராக இருக்கவில்லை இந்நிலையில்தான், பிரதமர் சந்திரிகா இராணுவ மற்றும் ஆயுதப்படை உயர் அதிகாரிகளுடனும் நீண்ட சந்திப்பொன்றை நடத்தினார் சுமார் நான்கரை மணிநேரம் நடைபெற்ற இச் சந்திப்பின் போதும் இராணுவம் விட்டுக் கொடுக்கவில்லை-

இந்நிலையில்தான் பிரதமர்சந்திரிகா இராணுவ உயர் அதிகாரிகளுடனான சந்திப்பில் பூநகரிப் பாதை தொடர்பாகவோ, யுத்தநிறுத்தம் தொடர்பாகவோ எந்தப் பேச்சுக்களையும் நடத்தவில்லை எனக் கௌரவமாகப் பின்வாங்க வேண்டி வந்தது;

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், அரசாங்கத்திற்கும் இடையில் முதலாம் சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. இப்பேச்சுக்களின் போது, விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து சமாதானத் தீர்விற்கு பூரண ஒத்துழைப்பு கிடைத்தபோதும், அரசாங்கத் தரப்பால் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு செல்லக் கூடிய ஒரு அதிகாரபூர்வமான அறிவிப்பை வெளியிட

யளித்திருக்கலாம்" என அவர் தெரிவித்திருப்பினும், பதிலளிக்க நீண்டகாலம் எடுத்தமையானது தனக்கு ஏற்பட்ட கௌரவப்பிரச்சினையாகவே அவர் கருதியதாகவே அவரது நடவடிக்கை உள்ளது.

அத்தோடு, முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் முடிவுற்ற நிலையில், அடுத்தகட்டப்பேச்சுக்களுக்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் வேளையில், பிரதமர் சந்திரிகா இராணுவத் தலைமையுடன் இவ்வாறு முரண்பட்டுக் கொண்டமையானது, இராணுவம், முதலாம் கட்டப்பேச்சின் முன்னேற்றம் குறித்து அறிந்து கொண்ட பின்னரும் கூட அரசாங்கத்தின் விருப்பிற்கு ஒத்துழைக்கத் தயாராகஇல்லைஎன்பதை உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடாகவே கருதவேண்டியுள்ளது. இதுவே பிரதமரின் சீற்றத்திற்கு காரணமாகலாம்.

ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று அதில் வெற்றி பெறும்வரை பொ ஐ மு. அரசாங்கம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமும் தேவையும் நிறையவே இருந்தது அதாவது அதிகாரம் கைமாறும்வரை பொறுமை காக்கவேண்டிய தேவை இருந்தது ஆனாலும் அதுவரை அவரால் பொறுமை காக்க முடியவில்லை

ஆனால், பிரதமர் சந்திரிகா இம் முரண்பாட்டின் மூலம் பெரும் சவால்களைச் சந்திக்கவேண்டியே வரும். ஏனெனில் இனப்பிரச்சினை விவகாரத்தில் மட்டுமல்ல, பிரதமர்சந்திரிகாவிற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட சகலருமே இதில் ஓரணியில் நின்று பிரதமர் சந்திரிகாவிற்கு எதிராகமோதக்கூடும்

இதில் முதல் கட்டமாக, இராணுவம் தனது மேலாண்மையை நேரடியாகவே நிலைநாட்ட முற்படலாம் ஏற்கனவே இராணுவச் சதிப்புரட்சிகள்பற்றி பேச்சுகள் பொதுத்தேர்தலின் போது அடிபட்டது; பின்னர் வெளிவந்த செய்திகள் ஜனாதிபதி தேர்தல் காலகட்டத்திலும் இவ்வாறான முயற்சிகளுக்கு சந்தர்ப்பம் உண்டு எனக்கூறின. இன்றைய நிலையில் பிரதமர் சந்திரிகா எழுப்பியுள்ள குற்றச்சாட்டு இராணுவத்தரப்பிற்கு அவ்வாறான அவசியத்தை மேலும் ஏற்படுத்தக் கூடும்,

இதேவேளை இவர்களை இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வை வலியுறுத்தும் பௌத்த சிங்கள அடிப்படைவாதிகள் பேரினவாத பத்திரிகைகள் ஆதரிக்கக்கூடும். ஏற்கனவே இவர்கள் சந்திரிகாவின் அரசியற் தீர்விற்கு எதிராக குரல் கொடுக்கவும் பூநகரி பாதை திறப்பு, யுத்தநிறுத்தம் போன்றவற்றில் எதிராகத் தொழிற்படத் தொடங்கியுள்ளனர்.

அடுத்த கட்டமாக இராணுவத்தை ஊட்ட வளர்த்து பின்னர் அதற்குக் கைகட்டி நின்ற ஐ. தே. கட்சியினரும் ஆட்சி அதிகாரத்தில் இராணுவத்தின் உதவியை நாடக் கூடும். இதனை வலியுறுத்துமாப் போலவே எதிர்க்கட்சித் தலைவரான காமினி திசா

**ஜெயராஜ்**

நாயக்கா, பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவின்

காட்டுவதாகவே கருத இடமுண்டு.

ஆனால் சிறிலங்காவில் இவ்வாறானதொரு அரசியற் சூழ்நிலை / முரண்பாடு உருவாவது தவிர்க்க முடியாததே. 'ஜனநாயக நாடு' ஒன்றில் இராணுவம் மேலாதிக்கம் பெற்றுவிட்ட சூழ்நிலையில் இவ்வாறான நிலை உருவானதற்கு உலகில் பல உதாரணங்களும் உண்டு. இவ்வாறானதொரு நிகழ்வின் உச்சக்கட்ட நிகழ்வே பாகிஸ்தானில் சுல்பிகார் அலிபூட்டோ. அதாவது இன்றைய பாகிஸ்தான் பிரதம மந்திரி பெனாசீர் பூட்டோவின் தந்தையார் இராணுவ அரசால் தூக்கிலிடப்பட்டமையாகும்.

ஆனால் இது ஒரு எதிர்பார்க்கப்பட்ட விடயம் தான். பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றால் அரசாங்கத்திற்கும்- ஜனாதிபதிக்கும் - இராணுவத் தரப்பிற்கும் இடையிலான முரண்பாடுகள் தவிர்க்க முடியாமல் எழுந்தே ஆகும் என்று அரசியல் விமர்சகர்கள் அன்று தெரிவித்ததை இன்றைய நடவடிக்கைகள் வெளிக்காட்டுபவையாகவே உள்ளன.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, தேர்தலின் முன்னர் யார் வெற்றி பெற்றாலும் அதிகாரம் என் கையிலேயே உள்ளது எனப் பேசினாராகிலும், தேர்தலின் பின்னர் அவ்வாறு பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டார். இதற்கு தனது ஆட்சிக்காலம் இறுதிக்கட்டத்தை நெருங்குவதை அவர் உணர்ந்திருக்கலாம், அல்லது தான் பேசினால் என்ன? பேசாது விட்டால் என்ன, தான் ஜனாதிபதியாக இருக்கும் வரை நிறைவேற்று

குழிகளைத் தோண்டுவதுமாகும். அதாவது வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நிறுத்துவதும், தென்னிலங்கையில் புதைகுழிகளைத் தோண்டும் நடவடிக்கையும் ஆகும்.

இவ்விரண்டு விடயங்களும் ஐ தே கட்சித் தலைமைக்கு எப்படிச் சங்கடமானதோ, அதே போன்றே இராணுவத் தலைமைக்கும் சங்கடமானதாகும். ஒரு புறம், இராணுவம் அனுபவித்து வரும் பெரும் சலுகைகளை இழப்பதோடு, போரில் தோல்வியை ஒப்புக்கொண்டதாகமுடியும், அடுத்ததாக, தோண்டப்படும் புதை குழிகளில் இருந்து வரும் உண்மைகளில் இருந்து பல இராணுவ அதிகாரிகள் பாதிக்கப்பட வேண்டி வரலாம். பலர் சிறை கூடச் செல்ல வேண்டியும் ஏற்படலாம்.

இந்நிலையில் தான், இராணுவம் ஆரம்பம் முதலே தனது பிடிகளைத் தளர்த்த விரும்பவில்லை. தளர்த்தப்படும் விடயங்கள் எதிர்காலத்தில் தனக்கு எதிரானதாகவே வந்து நிற்கலாம் என்பதே இப்பிடியைத் தளர்த்தாமைக்குக் காரணமாகும். ஆயினும் புதிய அரசாங்கத்திற்கும் இராணுவத் தரப்பிற்கும் இடையில், இவ்வளவு விரைவாக வெளிப்படையான முரண்பாடு ஏற்படும் என எவரும் எதிர்பார்த்து இருக்க முடியாது.

ஏனெனில் பொ ஐ முன்னணியைப் பொறுத்துமுதலில், ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றுகொள்வதே அதன்குறிக்கோளாகும். இந்நிலையில், அதன்முக்கிய நடவடிக்கைகளாக இருப்பது பழைய ஐ. தே. க,

ஒன்றை நடத்தினார். சுமார் நான்கரை மணிநேரம் நடைபெற்ற இச் சந்திப்பின் போதும் இராணுவம் விட்டுக் கொடுக்கவில்லை.

இந்நிலையில்தான் பிரதமர்சந்திரிகா இராணுவ உயர் அதிகாரிகளுடனான சந்திப்பில் பூநகரிப் பாதை தொடர்பாகவோ, யுத்தநிறுத்தம் தொடர்பாகவோ எந்தப் பேச்சுக்களையும் நடத்தவில்லை எனக் கௌரவமாகப் பின்வாங்க வேண்டி வந்தது.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், அரசாங்கத்திற்கும் இடையில் முதலாம் சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. இப்பேச்சுக்களின் போது, விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து சமாதானத் தீர்விற்கு பூரண ஒத்துழைப்பு கிடைத்தபோதும், அரசாங்கத் தரப்பால் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு செல்லக்கூடிய ஒரு ஆக்கபூர்வமான அறிவிப்பை வெளியிட முடியவில்லை.

இது பிரதமர் சந்திரிகாவிற்கு அவமானகரமானதொன்றாகவே இருந்ததுபோல் தெரிகின்றது. அரசாங்கம் எமது கைகளில் இருந்தும் அதிகாரம் இராணுவத்தினதும், ஜனாதிபதியினதும் கைகளில் குவிந்து போய் இருந்தமை அவருக்கு எரிச்சல் ஊட்டியிருக்க வேண்டும்.

இறுதியாக பி. பி. ஸிக்கு திங்களன்று அவர்வழங்கிய பேட்டியில், ''புலிகளது கடிதத்திற்குப் பதிலளிக்க எமக்கு நீண்டகாலம் எடுத்தது. அது அவர்களுக்கு கவலை

பூநகரி பாதை திறப்பு, யுத்தநிறுத்தம் போன்றவற்றில் எதிராகத் தொழிற்படத் தொடங்கியுள்ளனர்.

அடுத்த கட்டமாக இராணுவத்தை ஊட்ட வளர்த்து பின்னர் அதற்குக் கைகட்டி நின்ற ஐ. தே. கட்சியினரும் ஆட்சி அதிகாரத்தில் இராணுவத்தின் உதவியை நாடக் கூடும். இதனை வலியுறுத்துமாப் போலவே எதிர்க்கட்சித் தலைவரான காமினி திசா

## ஜெயராஜ்

நாயக்கா, பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவின் பேட்டியினை நெருப்புடன் விளையாடு செயல் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் பிரதமர் சந்திரிகா - இராணுவத் தரப்பு முரண்பாடு எத்தகைய தூரம் செல்லும் என்று சொல்வதற்கில்லை. காமினி திசாநாயக்கா கூறியது போல் இது நெருப்புடன் விளையாடும் செயல்தான். இதனால் சில சமயம் விபரீத விளைவுகள் பலவற்றை சிறிலங்கா எதிர்காலத்தில் சந்திக்க வேண்டி வரலாம். அதன் பின்னணியில் பல சக்திகள் ஆதாயம் தேடிக் கொள்வதற்கும் வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.

# மூழ்காது என

டவில்லை அமிழ்த்த முடியாதது என்றதற்புகழ்ச்சியை முற்றாக நம்பியிருந்தார்கள்.

இரவு 11-40 மணி போல் கப்பல் பனிமலையுடன்மோதுண்டதாயினும் உயிர்காக்கும் படகுகளை கீழிறக்கும் பணி 12. 05 மணிக்கே ஆரம்பமாயிற்று கப்பல்சிப்பந்திகளினால் படகுகள் இறக்கப்பட்டதையடுத்து ஆபத்தைக் குறிக்கும் சூழ்நிலையில் பாண்ட்வாத்தியம் இசைக்கப்பட்டது இசை தொடர்ந்து கொண்டேபோயின

பலமான ஓசையுடன் வந்த மின்வெட்டைத் தொடர்ந்து அவலநிலையைக் குறிப்பிடும் முதலாவது ஏவுகணைவிடப்பட்டது இறுதியாக பிரயாணிகள் தாங்கள் ஆபத்தில் மாட்டிக் கொண்டிருப்பதை உணர்ந்தார்கள்

அது வரையிலும் உயிர் காக்கும் படகுகளில் போவதற்கு எவரும் முன்வரவில்லை. பெண்கள் தங்களின் கணவன்மார்களுடன் இருப்பதற்கு அனுமதிக்குமாறு வேண்டிக் கொண்டார்களாயினும் கணவர்களின் வற்புறுத்தலின் பேரில்படகுகளில்ஏறினார்கள்

'' பெண்களும் குழந்தைகளும் முதலில் படகில் ஏறலாம் '' கப்பல் தலைவரிடமிருந்து வந்த மேற்படி உத்தரவை எவரும் மறுக்கவில்லை.

முதலாம் வகுப்பு பிரயாணிகளுள் ஒருவரான லேடி டவ் கோடன் (Duff Gordon) கணவனைப் பிரிந்து உயிர்காக்கும் படகில் ஏறமறுத்து விட்டாள் முடிவாக ஒரு சிறிய படகில் படகோட்டி விடுத்த அன்பான வேண்டுகோளை அடுத்து தயங்கியவாறு ஏறிக்கொண்டாள்.

அமெரிக்காவின் கோடீஸ்வரரான பெஞ்சமின் குகன்கெய்ம் (Benjamin uggenhim வாழ்நாளின் இறுதி வந்துவிட்டதற்கு அடையாளமாக மேல் மக்கள் அணியும் மாலைநேர உடையணிந்து கொண்டார் ''உயர் குடியில் பிறந்த கனவான் போல நீரினுள் மூழ்கிவிடுவேன்'' என்று கடைசியாகக் கூறிக் கொண்டார்.

கப்பலுடன் ஆழ் கடலினுள் அமிழ்ந்து விட்டவர்களுள் கப்பல் தலைவன், கப்பல்மாதிரிப்படம் வரைந்த தோமஸ் அன்ட்ரூஸ்(Thomas Andrews) கோடீஸ்வரன்இசடோர்றவுஸ் (Isadore Strauss)படைத்தளபதி ஜோன்ஜேக்கப் அஸ்ரார் (Astor) தேன் நிலவைக் கழித்து விட்டு மனைவியுடன் திரும்பிக்கொண்டிருந்தவர்; வில்லியம் ஸ்ரெட் (Willam Stead) புகழ்பெற்ற பத்திரிகை ஆசிரியர் முதலானோரைக் குறிப்பிடவேண்டும்.

வில்லியம் ஸ்ரெட் என்ற பத்திரிகை ஆசிரியருக்கு ஆபத்து வரப்போகின்றதென முன்பே கிடைத்த மனத்தோற்ற எச்சரிக்கையைஉதாசீனம் செய்ததனால் இக்கதி நேரிட்டது.

பிரமாண்டமான கப்பலொன்று வடபிராந்தியக் கடலில் நூற்றுக் கணக்கான உயிர்களுடன் மூழ்கப்போவதான தனது உருவளித் தோற்றத்தைக் கொண்டு அவரால் எழுதப்பெற்ற சிறுகதை 1892-ம் ஆண்டில் வெளியிடப்பட்டிருந்தது. ஆன்மீக நோக்காளரானவில்லியம் ஸ்ரெட் தனது இறப்பை முன்பே அறிந்திருந்தார்

டைடானிக்கப்பலில் சென்ற அனேகம் பிரயாணிகளுக்கு உண்மையாகவே மரணம் நெருங்கிக்கொண்டிருந்தது. உடனடியாகக் காப்பாற்ற வேண்டுமென்ற செய்தி ஜோன்பிலிப் என்ற வானொலி இயக்குநரால் கடைசி நிமிடம் வரை தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

கப்பலின் அவலமான நிலையை அறிந்து கொண்ட பல கப்பல்கள் முழு வேகத்துடன் உதவிக்கு வந்தன. ஆயினும் டைடானிக் கப்பலுக்கு வெகு அண்மையில் தரித்து நின்ற இரண்டு கப்பல்கள் மேற்படி அவசரகாலச் செய்தியை அறிந்து கொள்ளத் தவறிவிட்டன.

எட்டு மைல்களுக்கு அப்பால் தரித்து நின்ற கலியோனியாவின் வானொலி இயக்குநர் அச்சமயம் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

அறுபது மைல்களுக்கப்பால் தென்திசை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்த கார்பாத்தியா (Carpathia) வின் வானொலி இயக்குநர் அச்சமயம் வானொலிக் கருவியின் பக்கத்தே இருக்கவில்லை- கப்பல் தலைவனின் மேடையிலிருந்து திரும்பிய போது இரவு 12.30 மணியாகி விட்டது- விஷயம் தெரியாத இயக்குநர் புகழ்மிக்க டைடானிக் சுற்றுப்புறத்தில் பிரயாணம் செய்வதனால் அதனுடன் சம்பிரதாயபூர்வமாக தொடர்பு கொள்ளும் நோக்குடன் அழைப்பு விட்டபோது மறுபுறமிருந்து ''நாங்கள் பனிமலையுடன் மோதி விட்டோம் உடனே வரவேண்டும்'' என்ற நம்ப முடியாத செய்தி கிடைத்தது-

இரவு இரண்டு மணியளவில் டைடானிக்கின் வானொலி இயக்குநர் கீழ்க்கண்ட உத்தரவைப் பெற்றுக் கொண்டார்- ''கப்பலை விட்டு வெளியேறவும் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளுங்கள்-'' மேற்படி செய்தியைப் பெற்றுக் கொண்ட பின்பும் கடமை தவறாத வானொலி இயக்குநர் அபாய அறிவிப்பை (SOS)க் கடைசிவரையிலும் கொடுத்துக் கொண்டேயிருந்தார்-

ஜனக்கூட்டம் நிறைந்த உயிர்காப்புப் படகொன்றில் திருமதி எமிலி றிச்சாட்ஸ் தனது 10 மாதக் குழந்தை ஜோர்ஜ்சுடன் காணப்பட்டார். பின்னால் நடந்தவற்றைக் கீழ்க் கண்டவாறு விபரித்தார்:- 'நாங்கள் கப்பலிலிருந்து விலகி வந்துவிட்டோம். கடலின் மேல்பரப்பில் மனித உடல்களும் சிதைவுண்ட பொருள்களும் நிறைந்து காணப்பட்டன. சிலர் கப்பலிலிருந்து கடலில் குதித்து விட்டார்கள். உதவி கேட்டு அலறினார்கள் கடல் மிகவும் குளிராக இருந்தது. அவர்களையும் எங்களின் படகில் ஏற்றிக் கொள்ள முயன்றோம் ஆனால் படகில் இடநெருக்கடியால்முடியாதுபோயிற்று'

..அழிவுற்ற கப்பலைவிட்டகன்றுமிதந்துகொண்டிருந்த படகுகளில் தப்பித்துக்கொண்டவர்கள் அங்குள்ள காட்சியைக்கண்ணுற்றபோது நரகத்தில் மாத்திரமே இப்படியான காட்சிகளைக் காணக் கூடியதாக இருக்குமென்று எண்ணிக் கொண்டார்கள்''

''பனிக்கட்டிப் பாறைகள் நிறைந்த அந்திலாந்திக் மா கடலில் பிரம்மாண்டமான டைடானிக் சரிந்து கிடந்த போதும் சரம் சரமாக வெளிச்சம் அணைந்து விடாது பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. பயங்கரமானதும் உருவத்தில் மிகவும் பெரியதுமான பனிமலையினால் தாக்கப்பட்ட கப்பல் இன்னமும் அதனின்றும் அதிக தூரம் பிரிந்து போய்விடவில்லை. அடிமட்டத்திலிருந்து 175 அடிகள் உயரமான புகைபோக்கிகள் நான்கும் நட்சத்திரங்கள் நிறைந்த மேகத்தில் உயர்ந்து நின்றன''

''இரவு 2-20 மணியளவில் டைடானிக் நீர் மட்டத்திற்கு அடியில் மறையத் தொடங்கிற்று அப்போதும்கடல் பிராந்தியத்தில் கேட்டுக்கொண்டிருந்த பாண்ட் வாத்திய கீதம் மயிர் கூச்செறியச்செய்தது''

முடிவாக அங்கு எழுந்த இசை ஆதிகால ஆரம்பப்பாடலென்று சிலரும் ''இறைவா உன்னோடு நெருக்கமாயுள்ளேன் '' என்றும அங்கிருந்து தப்பிப்பிழைத்த வேறுசிலரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

எமிலி றிச்சாட்ஸ் என்ற பெண்மணி கூறியதாவது:- ''தூரத்தே கேட்கும் இடி போன்ற கடகடவென்று உருளும் ஓசைகேட்டது. வெளிச்சம் அணைந்து மீண்டும் பிரகாசித்து முடிவாக அணைந்து விட்டது. கப்பல் பின்புறம் மேலெழுந்து நின்றது. பின்னர் சடுதியாக டைடானிக் நீரினுள் மறைந்து விட்டது.

மூழ்கிய கப்பலிலிருந்து தப்பிப்பிழைத்த பிரயாணிகள் நிரம்பிய படகுகள் பொழுது விடியும் வரையிலும் செயலற்று மிதந்து கொண்டிருந்தன அதிலிருந்தவர்களெல்லோரும் குளிரினால் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். விடியற்காலை அங்குவந்த கார்பாத்தியா (Carpathia என்ற கப்பல் 705 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டது. தப்பிப்பிழைத்தவர்களில் அனேகமானோர் முதலாம் இரண்டாம் வகுப்பு பிரயாணிகள் படகுகளில் அவர்களுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது.

அவர்களின் குழந்தைகளெல்லோரும் காப்பாற்றப் பட்டனர் குறைந்த கட்டணம் செலுத்திய குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகளே காப்பாற்றப்பட்டனர்,

கலிபோனியா கப்பல் தலைவனின் மேடையிலிருந்தவர்களெல்லோரும் தொலைநோக்குக் கண்ணாடிகளின் மூலம் டைடானிக் கப்பலை அடிக்கடி கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். தாங்கள் பிரயாணம் செய்யும் கப்பலைப் போலவே அதுவும் பனிப்பாறைகளின் மத்தியில் நின்று விட்டதென்றே எண்ணினார்கள். தூரத்தே மினுக் மினுக்கென்று அதன் வெளிச்சம் தெரிந்தது.

மீண்டும் ஒருமுறை மோர்ஸ் தந்திக் குறியீட்டு முறையில் பாயஅறிவிப்பு சைகை வெளிச்சம் காட்டப்பட்டது. அதற்கும் எவ்விதமான பிரதிபலிப்பும்இல்லாது போகவே தங்களின் முயற்சியைக் கைவிட்டார்கள்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# லெப். கேணல் சந்தோசம் உருவப்படம் திறப்பு

லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரர் அவர்களின் நினைவு நாளாகிய இன்று மாலை 4 00 மணிக்கு லெப் கேணல் சந்தோசம் மாஸ்ரர், லெப். கேணல் பொன்னம்மான், லெப். கேணல் புலேந்திரன் ஆகிய மூவரினதும் நினைவுருவங்கள் ஒன்றாக வரையப்பட்ட கட்டவுட் ஒன்று யாழ். காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தியில் தாவடி வாழ் மக்களினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்ச்சியில் ஈகச்சுடரேற்றி லெப். கேணல் சந்தோசம் மாஸ்ரரின் பெற்றோரினால் நினைவுருவப் படம் திறந்து வைக்கப்படும்

இந் நிகழ்வில் அனைத்துத் தமிழீழ மக்களையும் கலந்து கொண்டு அம் மாவீரருக்கான வீர வணக்கத்தைச் செலுத்திச் சிறப்பிக்குமாறு யாழ்-மாவட்ட மாவீரர் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கண்டெடுப்பு

சங்கானைக்கும் மூளாய்க்கும் இடையிலான பிரதான வீதியில் கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது தவறவிட்டவர்கள் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொது நூலகத்துடன் தொடர்பு கொண்டு தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.


★ G. A. Q , UNIVERSITY STUDENTS TEACHING EXAM ஆகிய பாடத் திட்டங்களுக்கும்

★ வளர்ந்தோருக்கான SPOKEN ENGLISH வகுப்பும் ஆரம்பமாகின்றன.

காலம் :- 1994-10 22 (சனிக்கிழமை)
பி. ப 2. 00 மணி

ஆசிரியர்: திரு. G. பாலமுருகன்

குறிப்பு:-
ஆண்டு 4 முதல் 11 வரையான வகுப்புகளுக்குரிய சகல பாடங்களும் திறமை மிக்க ஆசிரியர் குழுவால் போதிக்கப்படுகின்றன.

கிருஷ்ணா கல்வி நிறுவனம்
கச்சாய் வீதி, கொடிகாமம்.

(9735) -நிர்வாகி



உ

தெல்லிப்பழை
துர்க்காபுரம மகளிர் இல்லம்
பன்னிரண்டு ஆண்டு நிறைவும்

பரிசளிப்பு நிகழ்வும்

காலம் :- 23-10-94 ஞாயிற்றுக்கிழமை
நேரம.- பிற்பகல் 3-00 மணி

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

தெல்லிப்பழை, நிர்வாகசபை,
18-10-94 ஸ்ரீதுர்க்காதேவிதேவஸ்தானம்

(9714)


## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 30 மணியளவில் நடைபெறவுள்ளது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் வே நவரெத்தினராசா கலந்து கொள்ளவுள்ளார். பரிசில்களை திருமதி சரஸ்வதி நவரெத்தினராசா வழங்குவார்.

## கூட்டம்

சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 2.30 மணியளவில் சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் சங்கானைச் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

## பொதுசன

நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்திவைக்கப்பட்ட அதே வேளை 2-ம் கட்டமாக 25 10 94 முதல் மீண்டும் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படவுள்ளன,

பொதுசன பிரதிநிதித்துவமுடைய மதசார்புள/மத சார்பற்ற அமைப்புகள் எவையும் 1-1 95 முதல் சமூக மட்டங்களில் செயல்படுவதற்கு தமிழீழநிர்வாகசேவைசான்றிதழ்கள் மிகவும் அவசியமானவையென தமிழீழ நிர்வாக சேவைப்பொறுப்பாளர்அறிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு

வெட்டை, சில்லிக்கொடி ஆறு, வீரக்காடு ஆகிய இடங்களை பல நூற்றுக்கணக்கான இராணுவததினர் சுற்றிவளைத்தனர். அதன் போது ஐந்துபொதுமக்களை தாந்தாமலை முருகன் ஆலயத்திற்கு முன்பாக வைத்து கண்மூடித்தனமாகத் தாக்கி விட்டு பின்னர் அவர்களை விடுதலை செய்தனர்

அதேவேளை புளுவுநாவி இராணுவ முகாமிலிருந்து வந்த விசேட அதிரடிப்படையினர் தாந்தாமலைப் பகுதிக்கு வந்து சில மூதாட்டிகளைக் கைது செய்து கொடுமைப்படுத்திவிட்டு முகாம் கொண்டு சென்றனர். இவர்களில் இருவர் மட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

நினைவுப்

# படையினரால் சமாதானம் கெடலாம்; பிரதமர் கூற்றால் ராணுவத்தில் சீற்றம்

(லண்டன்)

கடந்த திங்களன்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்க பி பி ஸிக்கு அளித்த பேட்டியில் வெளியிட்ட கருத்துக்கள் இராணுவத்தின் பலதரப்பிலும் கடும் உணர்வலைகளை தோற்றுவித்துள்ளது என பி பி ஸியின் செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் ஆய்வுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது புலிகளுடன் கடந்த 11 வருடங்களாக நடத்தப்பட்டு வரும் உள்நாட்டுப் போருக்கான முடிவு காண தனது அரசு எடுத்துவரும் முயற்சிகளை நாசமாக்க இராணுவம் முயற்சி செய்யக்கூடும் என்ற ஏது நிலையை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது என பிரதமர் கூறியிருப்பது அநாவசியமான வார்த்தைகள் என மூத்த இராணுவ அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

களத்திலிருந்து போரிடும் சாதாரண வீரர்களைப் போலல்லாது கொழும்பிலுள்ள உயர் தளபதிகள் அமைதி சமாதானத்திலும் பார்க்க போரையே விரும்புவது போல் தெரிகின்றது என அவர் பேட்டியில் கூறியிருந்தார்.

புலிகளுடன் இரண்டாம் கட்டப் பேச்சுக்களுக்கான நாட்கள் நெருங்கி வரும் வேளையில் இராணுவம் குறித்து அவர் வெளியிட்ட தகவல்களால் படைகளின் மூத்த அதிகாரிகள் பலர் திகைப்பும் சீற்றமும் கலந்த உணர்வலைகளை வெளியிட்டனர்; அரசு, புலிகளுடன் சமாதான முயற்சிகளை தொடங்கிய நாள் தொட்டே இராணுவம் அமைதி, சமாதானத்தையே நாடுவதாக இராணுவம் அதிகாரபூர்வமாக கூறி வந்தது ஆனால் அந்த சமாதானத்துக்காக எந்த விலையையும் கொடுக்க முடியாது எனவும் கூறி வந்தது. கௌரவத்துடனான சமாதானம் என்ற வார்த்தைகள் இப்போது கூறப்படுகின்றன: ஆனால் இப்போது இராணுவத்தின் மனோநிலை சரியாக இல்லை என மூத்த அதிகாரிகள் கூறுகின்றனர். சந்திரிகா அவர்கள் கூறியவற்றை நாசுக்காக கூறவில்லை என்ற ஏமாற்றம் சில அதிகாரிகளிடமிருந்து வெளிவந்திருக்கிறது.

தனது வீரர்களின் விசுவாசத்தை சாதாரண நிச்சயமான விஷயமென எடுத்துக் கொள்ளக்கூடாது என இன்னும் சிலர் கருத்துவெளியிட்டனர்.

சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்பு படையினர் குறித்து வெளியிட்ட தகவல்கள் இருமுனைத் தாக்குதல்களாக இருந்தன- வடக்கிலும் கிழக்கிலும் நடந்து கொண்டிருக்கும் போரைப் பற்றி மட்டும் அவர் குறிப்பிடவில்லை. ஜே. வி. பி. கிளர்ச்சிக் காலத்தில் நடந்த சட்ட விரோதமான கொலைகளுக்கும், செயல்களுக்கும் பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த தனது அரசு உறுதி பூண்டிருப்பதாகவும் அவர் கூறினார் இது பாதுகாப்பு படையினரின் உணர்வலைகளை தூண்டி விடும் விடயம்-

ஜே. வி பி. கிளர்ச்சியின் போது 30,000 பேர் காணாமல் போய்விட்டதாக கூறப்படுகின்றது. இப்போது ஐந்து ஆண்டுகளுக்கு பின் புதைகுழிகள் தோண்டப்பட்டு பாதுகாப்பு படையினர் சம்பந்தப்பட்ட வழக்குகளும் ஆரம்பமாகியுள்ளன- பழையவற்றை கிளறுவது ஆபத்தாக இருக்கக் கூடும்- ஆனால் பிரதமர் இந்த ஆபத்தை எதிர்க்க தயாராகஇருக்கிறார் என்பது இரு மடங்கு பலமான அடியாக காணப்படுகின்றது- பாதுகாப்பு படையினரைப் பொறுத்தவரை தாங்கள் தங்கள் கடமையைத்தான்செய்ததாக பரவலானகருத்து நிலவுகின்றது என அவ் ஆய்வுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது-


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

யாழ் ஸ்ரீதர் அகலத்திரையில்

முல்லை மாவட்ட கலைபண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து வழங்கும்

பொ. தாசனின்

"இன்னும் ஒரு நாடு"

தினசரி பிற்பகல் 2. 30, 4.00, 6. 00
சனி, ஞாயிறு காலை 10 30, 2. 30, 4 30: 6. 30

முக்கிய குறிப்பு:
பாடசாலை மாணவர்கள் அதிபர் ஊடாக தொடர்பு கொண்டால் காட்சி நேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.

(சி- 10555)



G. A. Q 96

பேராதனை பல்கலைக்கழகம்

(வெளிவாரி)

★ மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டு உள்ளன,

★ எம்மால் பதிவுகள் யாவும் செய்து கொடுக்கப்படும்.

இதற்கான விரிவுரைகள்

ஆரம்பம


## மூழ்காது என

பின்னர் இரவு 12.45 மணி போல் டைடானிக் இன் மேலாக திடீரென ஏவுகணைகள் போவதைக் கண்டார்களாயினும் அதனை புதுமையான வாணவேடிக்கையெனக் கருதினார்களேயன்றி மேற்கொண்டு விசாரணை எதுவும் செய்யவில்லை.

இரவு 2.20 மணியளவில் கலியோனியாவிலிருந்தவர்கள் தூரத்தே தெரிந்த வெளிச்சம் மறைந்து விட்டதைக் கண்டபின்பும் அவசர நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

இங்கிலாந்து தேசத்திலும் அமெரிக்காவிலும் மேற்படி சம்பவத்தை விசாரணை செய்த கோர்ட்டார் டைடானிக் கப்பலிலிருந்துஆபத்தைக் குறிக்கும் முகமாக மேலெழுந்த ஆகாசவாணங்களின் தன்மையைச் சரியாக உணர்ந்து கொள்ளத் தவறியமைக்காக கலியோனியாவின் தலைவரான ஸ்ரான்லிலோட் கடுமையான கண்டனங்களுக்கு

...த்திருக்க வேண்டும் அல்லது கப்பலை தெற்குப்பக்கம் திருப்பியிருக்கவேண்டும். இந்த இரண்டு வழிகளையும் கையாளாது கப்டன் சிமித் விட்ட பெரும் தவறென்றே விசாரணையிலிருந்து தெரியவந்தது ஆயினும் அக்கால சம்பிரதாயப்படி இப்படியான நடவடிக்கைகளுக்கு எந்தவிதமான குற்றமும் சுமத்தப்படுவதில்லை.

மேற்படி விசாரணையை முடித்துக் கொண்டபிரிட்டிஷ் கோர்ட்டார் கீழ்க்கண்ட மூன்று சிபார்சுகளைச் செய்தார்கள்:

1. உயிர்காக்கும் படகுகளின் எண்ணிக்கை கப்பலில் பிரயாணம் செய்யும்பிரயாணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.
2. இரவும் பகலும் வானொலிப் பெட்டிகள் இயங்கிக் கொண்டே இருக்கவேண்டும்.
3. பனிப்பாறைகள் நிறைந்த பிரதேசங்களில் கப்பல் முழுவேகத்தில் செலுத்தப்படாது அப்படி ஓட்டுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை

துர்க்காபுரம மகளிர் இல்லம்
பனிரண்டு ஆண்டு நிறைவும்

## பரிசளிப்பு நிகழ்வும்

காலம் :- 23-10-94 ஞாயிற்றுக்கிழமை
நேரம்.- பிற்பகல் 3-00 மணி

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

தெல்லிப்பழை, 18-10-94

நிர்வாகசபை,
ஸ்ரீதுர்க்காதேவிதேவஸ்தானம்

(9714)

---

யாழ்ப்பாணம் அரசினர் பொது
(போதனா) வைத்தியசாலை

## ஏல விற்பனை
## பாவிதத பொருட்கள்

பாவித்த வாகனப் பற்றறிகள், ரயர்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மின்விசிறிகள், அலுமினியப் பாத்திரங்கள் முதலியன 28 10 94 வெள்ளிக்கிழமை மு ப: 10 00 மணிக்கு இவ்வைத்தியசாலை வளவினுள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இப்பொருட்களை பார்வையிட விரும்புவோர் அவற்றை ஏல விற்பனைத் தினததிற்கு முதல்நாள் மு ப. 10.00 மணியிலிருந்து ந ப. 12 00 மணிவரை பார்வையிடலாம்.

சித்திபெறும் கேள்வியாளர் உடனடியாகப் பணத்தைச் செலுத்திப் பொருட்களை அன்றைய தினமே எடுத்துச் செல்ல வேண்டும்.

வைத்திய கலாநிதி
(செலவி) நமைமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்

20 10 1994 (சி-10550)

---

...கு வந்து சில மூதாட்டிகளைக் கைது செய்து கொடுமைப்படுத்திவிட்டு முகாம் கொண்டு சென்றனர். இவர்களில் இருவர் மட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

---

## நினைவுப் பேருரை

காலஞ் சென்ற சிறுவர் வைததிய நிபுணர், வைத்திய கலாநிதி அ. சிவபாதசுந்தரம் நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

பேருரை விடயம்; ''யாழ்ப்பாணத்தில் சிறுவர்களின் ஆரோக்கிய நிலை''

பேருரை வழங்குபவர்; சிறுவர் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி (திருமதி) வி. எம். கருணாகரன் (முதுநிலை விரிவுரையாளர். யாழ் பல்கலைக் கழகம்)

பதிவாளர்

(சி/10554)

---

# G. A. Q 96

## பேராதனை பல்கலைக்கழகம்

(வெளிவாரி)

★ மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டு உள்ளன,

★ எம்மால் பதிவுகள் யாவும் செய்து கொடுக்கப்படும்.

இதற்கான விரிவுரைகள்

ஆரம்பம
22 - 10-1994
சனி காலை 9 மணி

விபரங்களை நேரில் பெறவும்

விபரங்களுக்கு

எஸ். அருள் நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி-10540)

---

### இன்று 4-ம் ஆண்டில் காலடிவைக்கும் யா / வடமராட்சி மத்திய கல்லூரியை வாழ்த்துகிறோம்

மூன்றாண்டு காலத்துள் முத்தமிழில்
-ஆங்கிலத்தில்
வித்தைகள் பலவற்றில் வியத்தகுபல்
-சாதனைகள்
புத்திமிகு நினதுசிறார் புரிந்திடவே
-வைத்தவள் நீ
பத்தியுடன் நின்பாதம் பணிந்துன்னை
-வாழ்த்துகிறோம்

அதிபர், ஆசிரியர், மாணவர்,
பெற்றார், நலன்விரும்பிகள்
பழைய மாணவர்கள்.

(சி-10548)

---

யாழ். மாவட்ட

### வணிகர் கழகங்களின் இணையம்

## முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 22.10.94, 23.10.94, 29.10.94 30.10.94 சனி ஞாயிற்றுக்கிழமைகளில் வர்த்தக நிலையங்கள் முழுமையாக திறந்து வியாபாரம் செய்யலாம் என அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

செயலாளர்
(சி-10553)

---

...கலியோனியாவிலிருந் தவர்கள் தூரத்தே தெரிந்த வெளிச்சம் மறைந்து விட்டதைக் கண்டபின்பும் அவசர நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

இங்கிலாந்து தேசத்திலும் அமெரிக்காவிலும் மேற்படி சம்பவத்தை விசாரணை செய்த கோர்ட்டார் டைடானிக் கப்பலிலிருந்துஆபத்தைக் குறிக்கும் முகமாக மேலெழுந்த ஆகாசவாணங்களின் தன்மையைச் சரியாக உணர்ந்து கொள்ளத் தவறியமைக்காக கலியோனியாவின் தலைவரான ஸ்ரான்லி லோட் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளானார். 1962-ம்ஆண்டு தனது மரணப்படுக்கையிலும் கோர்ட்டாரின் முடிவை எதிர்த்து வாதாடிக் கொண்டேயிருந்தார்,

கப்பலின்வேகத்தைக் குறை...

...ல்லை.

மேற்படி விசாரணையை முடித்துக் கொண்டபிரிட்டிஷ் கோர்ட்டார் கீழ்க்கண்ட மூன்று சிபார்சுகளைச் செய்தார்கள்:

1. உயிர்காக்கும் படகுகளின் எண்ணிக்கை கப்பலில் பிரயாணம் செய்யும்பிரயாணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும்.
2. இரவும் பகலும் வானொலிப் பெட்டிகள் இயங்கிக் கொண்டே இருக்கவேண்டும்.
3. பனிப்பாறைகள் நிறைந்த பிரதேசங்களில் கப்பல் முழுவேகத்தில் செலுத்தப்படாது அப்படி ஓட்டுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அனேகமான கடல் பிரயாணிகள் மாண்ட பின்பு காலங் கடந்தே தடுப்புச் சட்டம் உருவாகின.

---

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு தம்பிஐயா (நடராசா)

18/3 மணல்தறை ஒழுங்கை கந்தர்மடத்தைச் சேர்ந்த கதிரவேலு தம்பிஐயா (நடராசா) 20-10-94 அன்று காலமானார். அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், நிர்மலா, தனலக்சுமி, நவலோஜனா, சத்தியசீலன், பத்மலோஜனி, வரதலக்சுமி, சுகிர்தா, ஜெயசீலன் ஆகியோரின் அன்புத்தந்தையும், விவேகானந்தன், சிங்கராஜா, இராஜதுரை, சத்தியா, சிறிகுகநிமலன், சத்தியசீலன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மாமனாரும் திருமதி நிர்ஜிதா ரவீந்திரன், வினர்ஜிதா, தேவஜிதா, பாலஜிதா, நிஷானி, ஜெனார்த்தனி, ஜெயடபிரகாஷ், லதாஜினி, துஷ்யந்தி, ரீஷாந்தா, டினேஷ்குமார், சதீஷ்குமார், சஞ்சுதன், மதிசுதன், திவேதிகா ஆகியோரின் அன்புப் பேரனும் தனியாவின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளிற்காக 21-10-94 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்!
த. சத்தியசீலன் (றஞ்சன்)
(மகன்)

[9750]

---

### சதாசிவக்குருக்கள் சிதம்பரப்பிள்ளை

சதாசிவக்குருக்கள் சிதம்பரப்பிள்ளை குருக்கள் 20-10-1994 இல் காலமானார். அன்னாரின் கிரியைகள் 21-10-1994 இன்று இந்திர அம்மன் கோவிலடியில் நடைபெறும். அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. இந்திரராசசர்மா
(மகன்)

துன்னாலை,
கரவெட்டி. (9749)

---


## போட்டோ அல்பம் இனாம்

- கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்.
- கொம்பியூட்டர் றபர் சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
- லயின்,காவ்ரோன் கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
- புகைப்பட பிரதியாக்கம் (RE-COPY) மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

# (:) கொழும்பு கலைக்கூடம் (:)

(கொழும்பு ஸ்ருடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில் நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10462)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.